www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

பிப்ரவரி- 2007
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

## CPI(M)

## கார்ப்பரேட் பார்ட்டி ஆஃப் இந்தியா (டாடாயிஸ்ட்)

படிப்பகம்

www.padippakam.com

# பகுத்தறிவின் லீலைகள் வியந்தோதாய் உடன்பிறப்பே...



ஏய்! சாயிபாபா
வெறுங்கையிலிருந்து விபூதியும் பூச்செண்டும்
வரவழைத்தாயே! அதுவா அற்புதம்?

வெயிலறியா உன் தலைமுடியிலிருந்து
விதவிதமாய் கடிகாரங்களை வரவழைத்தாயே!
அதுவா அற்புதம்?

பசியறியா உன் வயிற்றியிலிருந்து
பலப்பல லிங்கங்களை வரவழைத்தாயே!
அதுவா அற்புதம்?

அடே! சாயிபாபா
வழியறியா உன் காவிக் கஜானாவிலிருந்து
கடைசியில் கருணாநிதியை
வெளியே வரவழைத்தாயே!
அதுவன்றோ அற்புதம்!!

வீழ்ந்திற்றோ கொள்கைக் குன்று - என்று
விளங்காத உடன்பிறப்பே...
இருநூறு கோடி எதிரே வருகையில்
பெரியார் பார்வையா பார்க்க முடியும்?
கொஞ்சம் பகுத்தறிவோடு பார்!

யாருக்கும் தலைவணங்காத சுருள்முடியையே
கோபாலபுரம் தன் காலடிக்கு வரவழைத்தது
ஆன்மீகத்திற்கே பேரடி அல்லவா?
அதிசயம் அல்லவா?

அற்புதத்தில் விஞ்சி நிற்பது
பாபாவா? கலைஞரா? பார்!

வெறுங்கையிலிருந்து நோக்கியாவை
வரவழைத்தார்!
இதோ... ஊமைகள் பேசுகிறார்கள்!

காலிக் கஜானாவிலிருந்து
கலர் டி.வி.யை வரவழைத்தார்!
அதோ... குருடர்கள் பார்க்கிறார்கள்;

வாயிலிருந்தே இரண்டு ஏக்கர் நிலத்தை
வரவழைத்தார்!
அதோ முடவர்கள் நடக்கிறார்கள்.

அது மட்டுமா...?

அணுவைத் துளைத்து, மலைகள் விழுங்கி,
ஆழ்கடல் குடித்து ஆயிரமாய் விளைநிலங்கள்
செரித்து
குறுகத் தறிக்கும் உலகமயப் பொதுமறையை

ஓவியமாய்த் தீட்டும் அற்புதம்
அந்த பாபாவுக்கு வருமா?

அவரா, இவரா?
அற்புதத்தைத் தெரிவு செய்ய முடியாமல்
திக்குமுக்காடி நெளிகிறது தெலுங்கு கங்கை.
ஆசீர்வாதத்திற்குப் பயந்து
ஓடி ஒளிகிறது கூவம்!

● துரை. சண்முகம்

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

● போர்: **24**
● குரல்: **7,8,9**
● டிச 2006, ஜன - பிப் 2007

உள்நாடு: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# காவிரி: தேசியக் கட்சிகளின் இரட்டை வேடத்தையும், கன்னட இனவெறியையும் முறியடிப்போம்!

**“கா**விரி கர்நாடகத்துக்கு மட்டுமே சொந்தமானது; தமிழகத்துக்கு அதன்மீது எவ்வித உரிமையும் இல்லை'' என்ற குதர்க்க வாதம்தான் இதுநாள் வரை கர்நாடக அரசு செய்த வந்த எல்லாவிதமான சட்டவிரோத அடாவடித்தனங்களுக்கும் அடிப்படையாக அமைந்திருந்தது. இந்தப் பின்புலத்தில் 1990-இல் அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம் தற்போது வழங்கியுள்ள இறுதித் தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகிறது. 1924 ஒப்பந்தத்தைப் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மீளாய்வு செய்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதிலிருந்து, மேற்கூறிய ஒப்பந்தத்தையே மறுத்து வந்த கர்நாடக அரசின் வாதம் நிராகரிக்கப்பட்டுள்ளது. 'காவிரி நீர் என்பது தமிழகத்துக்கு கர்நாடகம் வழங்கும் தருமம் அல்ல' என்பதுடன் காவிரி நீரில் தமிழகத்துக்குள்ள பாரம்பரிய உரிமையும் இத்தீர்ப்பின் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது. பெரியாறு அணை தொடர்பான பிரச்சினையில் கேரளாவின் மார்க்சிஸ்டு அரசு முன்வைத்து வரும் இதே விதமான வாதத்திற்கும் இத்தீர்ப்பு பதிலாக அமைந்திருக்கிறது.

தண்ணீர் ஆண்டென்பது ஜூன் 1-ஆம் தேதி தொடங்கி, மே 31-இல் முடிவடைகிறதென்றும், இந்தக் காலகட்டத்தில் மாதந்தோறும் கர்நாடகம் எவ்வளவு தண்ணீரைத் திறந்து விட வேண்டுமென்பதையும் நடுவர் மன்றம் வரையறுத்துக் கூறியுள்ளது. இரண்டு சாகுபடிகளுக்கான ஒப்பீட்டளவிலான உத்திரவாதம் இதன்மூலம் கிடைத்துள்ளதுடன், தமக்கு வசதிப்பட்ட நேரத்தில் தண்ணீரை வழங்குவது, பிறகு ஆண்டுக்கு இத்தனை டி.எம்.சி. தண்ணீர் வழங்கிவிட்டதாகக் கணக்குக் காட்டுவது என்ற கர்நாடகத்தின் மோசடி இதன் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தண்ணீர் பற்றாக்குறைக் காலங்களில், அப்போதுள்ள நீர் கையிருப்பு அளவுக்கு ஏற்ப, இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள விகிதாச்சார அடிப்படையில் தண்ணீர் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று கூறியுள்ளதன் வாயிலாக, 'எங்களுடைய தேவைக்குப் போக உபரி இருந்தால்தான் தமிழகத்துக்குக் கொடுக்க முடியும்' என்ற கர்நாடக அரசினுடைய அடாவடித்தனமான வாதத்தின் அடிப்படையையும் நடுவர் மன்றத் தீர்ப்பு தகர்த்துள்ளது.

ஏற்கெனவே நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பில், மேட்டூர் அணைக்கு வந்து சேரும் நீரே, தமிழகத்துக்கு வழங்கப்படும் நீராக அளவிடப்பட்டிருந்தது. தவறான புள்ளிவிவரங்களை அளிப்பதற்கும், முரண்பாடுகள் தோன்றுவதற்கும் அடிப்படையாக இருந்த இந்த நீர் அளவிடும் முறை தற்போது மாற்றப்பட்டுள்ளது. மைய அரசின் நீர்வளத் துறையால் பராமரிக்கப்படும் கர்நாடக தமிழக எல்லையில் உள்ள பிலிகுண்டுலு நீர் அளவை மையத்திலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் அளவே கணக்கில் கொள்ளப்பட வேண்டுமென தற்போதைய தீர்ப்பு கூறியுள்ளது.

பிலிகுண்டுலு அளவை மையத்திலிருந்து ஆண்டுதோறும் 192 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் தரவேண்டுமென தற்போதைய இறுதித் தீர்ப்பு கூறுகிறது. பிலிகுண்டுலுவுக்கும் மேட்டூருக்கும் இடையிலுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழையின் மூலம் காவிரிக்கு வந்து சேரும் நீர் 25 டி.எம்.சி. என்பதால் ஆண்டுதோறும் மேட்டூருக்குக் கிடைக்கும் நீரின் அளவு 217 டி.எம்.சி.யாக அதிகரித்துள்ளது. இதிலிருந்து தமிழகம் புதுவைக்கு வழங்கவேண்டிய 7 டி.எம்.சி. தண்ணீர் போக மீதம் கிடைக்கும் நீரின் அளவு ஏற்கெனவே இடைக்கால உத்தரவில் குறிப்பிடப்பட்ட நீரின் அளவைக் காட்டிலும் அதிகமே என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் கேரளத்துக்குரிய 30 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் பயன்படுத்தும் வாய்ப்பு தற்போது இல்லையென்பதால், அந்த நீரையும் தமிழகமே பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று, தண்ணீர் பகிர்ந்து கொள்ளப்படுவதைக் கண்காணிக்க ஒரு ஒழுங்குமுறை ஆணையத்தை அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தண்ணீரை கால அட்டவணைப்படி வழங்க வேண்டுமென்றும், அதனைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் கர்நாடகம் ஈடுபடக்கூடாது என்றும், ஒரு மாதத்தில் திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைந்தால் அடுத்த மாதமே அது பாதிக்கப்பட்ட மாநிலத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. புதிய நீர்மின் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பாசனத்துக்கான தண்ணீரின் அளவில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதையும் தீர்ப்பு குறிப்பிடுகிறது.

தீர்ப்பில் குறைகள் இல்லாமலும் இல்லை. தஞ்சையின் குறுவைப் பாசனப்பரப்பு குறைக்கப்பட்டுள்ளது, அமராவதி பாசனப்பகுதியின் கரும்புப் பாசனம் கணக்கில் கொள்ளப்படாதது, பற்றாக்குறைப் பகிர்வு குறித்த வழிகாட்டுதல்களில் குறைபாடு, உபரிநீர் பகிர்வு குறித்து எதுவும் குறிப்பிடப்படாமை போன்ற குறைபாடுகள் ஊடகங்களில் விவாதிக்கப்படுகின்றன. தீர்ப்பின் பாதகமான அம்சங்கள் குறித்து மேல்முறையீடு செய்யவிருப்பதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. மாறாக, கர்நாடக அரசோ, தீர்ப்பையே நிராகரிப்பதாகவும் மேல்முறையீடு செய்யவிருப்பதாகவும் கூறியிருக்கிறது. பாசனப்பரப்பு அதிகமாகவும், தண்ணீர் பற்றாக்குறையாகவும் உள்ள சூழலில், எல்லாத் தரப்பினரும் முழுமையாகத் திருப்தியடையத்தக்க தீர்ப்பொன்றை வழங்குவது கடினம்.

படிப்பகம்

www.padippakam.com

ஆயினும், தீர்ப்பின் விவரங்களுக்குள் செல்லாமலேயே தீர்ப்புக்கு எதிரான வெறித்தனமான போராட்டங்கள் கன்னட இனவெறியர்களாலும், பா.ஜ.க., காங்கிரசு உள்ளிட்ட தேசியக் கட்சியினராலும் கர்நாடக விவசாயிகள் மத்தியில் தூண்டிவிடப்படுகின்றன. கர்நாடகத் தமிழர்களுக்கெதிராக வன்முறையைத் தூண்டுவதற்கான சூழல்கள் திட்டமிட்டே உருவாக்கப்படுகின்றன. அதே நேரத்தில், தீர்ப்புக்கு எதிராக கர்நாடக ஓட்டுக் கட்சிகள் நடத்தவிருந்த கடையடைப்பு, 'பன்னாட்டு நிறுவனங்களின் போர்விமான வர்த்தகக் கண்காட்சி' பெங்களூரில் நடந்ததையொட்டி அம்மாநில முதல்வரின் கோரிக்கையை ஏற்று தள்ளி வைத்து நடத்தப்பட்டது. கர்நாடக ஓட்டுப் பொறுக்கிகளின் ஏகாதிபத்திய அடிமைத்தனத்திற்கும், இந்தப் போராட்டங்களின் போலித்தனத்திற்கும் இதுவே சான்று.

கர்நாடக விவசாயிகளின் தற்கொலையும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விவசாயிகள் அங்கே துரத்தப்படுவதும், காவிரிச் சிக்கல் தோற்றுவித்த பிரச்சினைகள் அல்ல. அவை மறுகாலனியாக்கக் கொள்கைகளின் விளைவுகள். பாசனப்பராமரிப்பு திட்டமிட்டே புறக்கணிக்கப்படுவது, ஆறுகள் மாசுபடுத்தப்படுவது, அரசு கொள்முதல் ரத்து, பன்னாட்டு நிறுவனங்களின் தானியக் கொள்முதல், தானிய விற்பனையில் ஊகவணிகம் போன்ற விவசாயிகளைக் கொல்லும் பல்வேறு பிரச்சினைகளுக்காக இவர்கள் போராடுவதில்லை. இரு மாநிலங்களுக்கு இடையில் முரண்பாடாக உருவெடுக்கும் பிரச்சினைகளை மட்டுமே விவசாயிகள் மற்றும் மக்கள் பிரச்சினையாகச் சித்தரிக்கும் இத்தகைய இனவாதம் அம்பலப்படுத்தி முறியடிக்கப்பட வேண்டும். அதேபோல, கர்நாடகத்தில் ஒன்றும் தமிழகத்தில் ஒன்றும் பேசும் சந்தர்ப்பவாதத்தையே தமது அரசியல் நடைமுறையாகக் கொண்டிருக்கும் தேசியக் கட்சிகளின் இரட்டை வேடமும் தோலுரிக்கப்பட வேண்டும். காவிரி தொடர்ந்து பிரச்சினையாகவே நீடிப்பதற்கு இந்த அயோக்கியர்களின் இரட்டைவேடமே முதன்மையான காரணம்.

இந்தத் தீர்ப்பை முடக்குவதற்குத் தன்னாலான அனைத்தையும் கர்நாடக அரசு செய்யும் என்பது தெளிவு. எனவே, தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவது, தீர்ப்பின் பாதக அம்சங்களுக்கு எதிரான மேல்முறையீடு போன்ற சட்டபூர்வ முறைகளைத் தமிழக அரசு விரைவுபடுத்த வேண்டும். அரசியல் சட்டத்துக்கோ, நியாயத்திற்கோ, கர்நாடக அரசு கட்டுப்பட மறுத்தால், 'நிபந்தனையற்ற தேசிய ஒருமைப்பாடு எதும் இல்லை' என்பதை நிலைநாட்டும் வகையில் அரசியல் ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# 30 ரூபாய் கூலிக்காக நாளொன்றுக்கு 150 கி.மீ ரயில் பயணம்: முன்னேறுகிறது இந்தியா!

ரேவண்டாபாய் காம்ளே தனது ஆறு வயது மகனோடு பேசிப் பல மாதங்களாகி விட்டது. ஒரே வீட்டில் தான் இருக்கிறார்கள், ஆனால் இப்படியொரு நிலைமை. பூரிபாய் நாக்புரேவுக்கும் அப்படித்தான் - சில சமயம் பெரிய மகனோடு பேச நேரம் கிடைக்கும், அதுவும் அவன் விழித்துக் கொண்டிருந்தால்.

மகாராஷ்டிரா மாநிலம், கோண்டியா மாவட்டம், திரோடா என்ற சிற்றூரில் ரேவண்டாபாய், பூரிபாய் போலவேதான் நூற்றுக்கணக்கான பெண்களின் அன்றாட வாழ்க்கை இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவர்கள் நான்கே மணி நேரம்தான் வீட்டில் ஓய்வெடுக்க முடியும் (அது ஓய்வா - உறக்கமா?) இப்படி வ்யிற்றுப்பாடுக்காக நாள்தோறும் போக, வர சுமார் 150கி.மீ. பயணப்பட்டு அல்லல்படும் அவர்களுக்குக் கிடைக்கும் சொற்பக் கூலி வெறும் முப்பது ரூபாய்.

விடியற்காலை 6 மணி - நாங்கள் அவர்களோடு சேர்ந்து ரயிலுக்குப் புறப்பட்ட நேரம் அது. அவர்கள் அதற்கு இரண்டு மணி நேரம் முன்பு எழுந்திருந்தால்தான் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்ப முடியும்.

''சாப்பாடு செய்து முடிச்சு, துவைத்து, பெருக்கி, சுத்தம் செய்து, கழுவி எல்லா வேலையும் முடித்து விட்டேன்'' - பூரிபாயின் குரலில் ஒரு நிறைவு - ''இப்ப நாம எவ்வளவு வேணும்னாலும் பேசலாம்'', என்றார். அந்த நேரத்தில் அவர் வீட்டில் எல்லோரும் அசந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். ''பாவம், பொழுதுக்கும் வேல செஞ்சி சோர்ந்து போயிடுதுங்க'' என்றார் பூரிபாய். ''நீங்க சோர்ந்து போவலியா?'' என்ற என் கேள்விக்கு அவர் சொன்ன பதில்: ''இல்லாம? வேறென்ன செய்ய? வேற வழியில்லே.''

ரயில் நிலையம் சென்றபோது பூரிபாய் போலவே வேறு வழியில்லாத ஏராளமான பெண்கள் ரயிலுக்குக் காத்துக் கொண்டிருந்தார்கள். அது எனக்கு விசித்திரமாகத் தோன்றியது. அவர்களில் யாருமே வேலைதேடி கிராமத்திலிருந்து நகரங்களுக்கு ஓடவில்லை; மாறாக, சிறு நகரத்திலிருந்து கிராமம் நோக்கி வேலை தேடிப் போகும் அவர்கள் நாடோடிக் கூலிகள்.

ஒவ்வொரு நாளும் கிராமத்தில் விவசாயக் கூலி வேலை செய்ய வேண்டும். வார விடுமுறை என்ற பேச்சே இல்லை. திரோடாவில் எந்த வேலைகளும் கிடையாது. கோண்டியாவில் உள்ள 'கிசான்சபா'வின் (விவசாயச் சங்கம்) செயலர் மகேந்திர வால்டே சொன்னார்: ''இந்த வட்டாரத்தில் பீடித் தொழில் அழிஞ்சபிறகு இங்க ஒரு வேலையும் இல்லே.''


அக்கம் பக்கத்திலிருந்து 5,6 கி.மீ. நடந்துதான் தினமும் அவர்கள் ரயில் நிலையத்துக்கு வரவேண்டும். ''விடி

காலை 4 மணிக்கு எழுந்து
சமையல் வேலை. பிறகு
6 கி.மீ ரயில் நிலையம்
நோக்கி நடை, 7 மணிக்கு ரயில்,
2 மணி நேரப் பயணம்.
இறங்கி மீண்டும் 3 கி.மீ நடை,
வயல் வேலை முடிந்து மீண்டும்
இரவு 8 மணிக்கு ரயில்.
வீடு வந்து சேர்வது
இரவு 11 மணி.
மீண்டும் அதிகாலை
4 மணிக்கு சமையல்.



படிப்பகம்

www.padippakam.com



திரோடா ரயில் நிலையம்: அதிகாலை நேரத்தில் காத்திருக்கும் மக்கள்.

யக் காலமே 4 மணிக்கு எழுந்திருச்சி, வேல எல்லாம் முடிச்சு ஸ்டேசனுக்கு நடந்தமுன்னா போய்ச் சேர 7 மணி ஆயிடும்.'' அடிச்சுப் பிடிச்சு வண்டிக்குள் ஏறினா, கூட்டத்தோட கூட்டமா சால்வா கிராமத்துக்குப் பயணம். போக 2 மணி நேரம் பிடிக்கும்.

அந்தப் பெண்களின் கண்களில் சோர்வு, முகங்களில் கனத்த களைப்பு, பசி, அரைத்தூக்கம். அமர்ந்து ஓய்வாகப் பயணம் செய்யலாம் என்றால் இடமும் கிடைக்காது. அப்படி அப்படியே தரையில் உட்கார்ந்தவாறும், ரயில் பெட்டிகளின் உள் சுவரில் சாய்ந்தவாறும் அந்த இரண்டு மணி நேரத்துக்குள் அவரவர் வேலை செய்யும் இடம் வருவதற்குள் முடிந்தவரை குட்டித் தூக்கம் போட்டுக் கொண்டே வந்தார்கள்.

''திரும்ப வீடு போய்ச் சேர ராவுலே 11 மணி ஆயிரும். தலையச் சாச்சுப் படுக்கறதுக்குள்ளாற நடுநிசி ஆயிரும். மறுபடி அடுத்தநாள் கார்லையில 4 மணிக்கு முழிக்கணும்'' என்று விவரித்த ரேவண்டா பாய் ''என்னோட சின்னப் பையன் முழிச்சிருந்து பாத்துப்பேசி ரொம்ப நாளாயிடுச்சி'' என்று சொல்லிச் சிரித்தார். சிரிப்பு வருத்தத்தில் நனைந்திருந்தது —''அப்படி என்னைக்காவது ஒரு நா, பசங்க அவுங்கவுங்க பெத்தவங்களப் பாத்தாக்க அவுங்கதான் அம்மாவான்னு தோணிரும்'' என்றார் அவர்.

நிறைய பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகாம பாதியிலேயே நின்னு போகும் - படிக்க வைக்க வசதி கிடையாது; அப்படியும் போகிற பிள்ளைகள் நன்றாகப் படிக்காது. ''வீட்டுல இருந்து கவனிக்க, படிச்சியான்னு கேக்க, கொள்ள ஆளு கிடையாது'' என்றார் பூரிபாய். சில பிள்ளைகள் கிடைக்கிற வேலைய்ச் செய்யப் போவதும் உண்டு.

திரோடா பள்ளி ஆசிரியர் லதா பாபங்கர் சொல்வதுபோல, ''அவங்க நல்லா படிக்க மாட்டாங்க. அதுக்கு அவுங்கள குத்தம் சொல்ல முடியாது.'' மகாராஷ்டிர அரசாங்கத்தைத் தான் குறை சொல்ல வேணடும்; இந்தப் பிள்ளைகள் சரியாகப் படிக்கவில்லை என்றால், பள்ளிக்கூடம் சரியாகச் செயல்படவில்லை என்று காட்டி அரசாங்கமே உதவிகளை நிறுத்தி விடுகிறது; மாணவர்களுக்குத் தங்களால் முடிந்த உதவிகளை ஆசிரியர்கள் செய்தாலும், தேர்வுகளில் தேர்வு விகிதம் சரியில்லை என்று அந்த ஆசிரியர்களையே அரசாங்கம் தண்டிக்கிறது. இதனாலும் கூட மாணவர்கள் பள்ளிக்கூடம் போவது மெள்ள மெள்ளக் குறைந்து நின்றும் போகிறது.

ரயில் ஓட்டத்தோடு குலுங்கும் தரையில் உட்கார்ந்திருந்த சகுந்தலா பாய் அகோஷே கடந்த 15 வருடமாக இப்படித்தான் வேலைக்குப் போய் வருவதாகச் சொன்னார். பண்டிகைகள் ஏதாவது வந்தாலோ, மழை வந்தாலோதான் இடையில் அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும்.

''ரொம்ப அபூர்வமாக ஒரு நாளைக்கு 50 ரூபாய் கிடைக்கும். மத்தப்படி எல்லா நாளுலயும் இருபத்தஞ்சுலேர்ந்து முப்பது ரூபாதான் கூலி'' என்றார் சகுந்தலா பாய். வெளி வேலையை விட்டால் உள்ளூரிலேயே செய்வதற்கு எந்த ஒரு வேலையும் இல்லை.

www.padippakam.com

சிறு நகரங்களிலிருந்து இப்போதெல்லாம் பணம் பெரு நகரங்களுக்கு நகர்ந்து விட்டது. இங்கிருந்த மிச்ச மீதி சிறு தொழில் நிறுவனங்களும் முடங்கிப் போய் மூடப்பட்டு விட்டன. சிறு நகரங்கள் கண் எதிரே அழிகின்றன. அனேகமாக, பயணம் செய்து கொண்டிருக்கும் அத்தனைப் பெண்களும் முன்பு பீடி சுற்றிக் கொண்டிருந்தவர்கள். ''பீடித் தொழில் நசிஞ்சவுடனே எல்லாமே அத்துப் போச்சி'' என்றார்பூரிபாய்.


''பீடித் தொழிலே சிறு தொழில் தான். எங்கே மலிவான உழைப்பு கிடைக்கிறதோ அந்த இடத்துக்கு பீடித் தொழில் நகர்ந்துவிடும்'' என்கிறார் கே.நாகராஜ் என்கிற 'மிட்ஸ்' (வளர்ச்சி பற்றிய ஆய்வு நிறுவனம், சென்னை) நிறுவன ஆய்வாளர். அவரது ஆய்வின்படி, ''பீடித்தொழில் வெகுவேகமாக இடம் மாறிவிடும். இதனால் கூலிகள் படுகிற பாடு சொல்லிமாளாது. கடந்த 15 வருடங்களில் நிலைமை படுமோசமாகி விட்டது.''

கிசான் சபாவைச் சேர்ந்த பிரதீப் கூற்றுப்படி, ''கோண்டியா பகுதியின் பீடித்தொழில் உத்தரப்பிரதேசத்துக்கும் சட்டீஸ்கருக்கும் இடம் பெயர்ந்துவிட்டது.''

ஒரு பெண் ரயிலில் தினமும் நடக்கிற ஒரு வேடிக்கையான அவலத்தை விவரித்தார். அவர்கள் யாருமே பயணச்சீட்டு வாங்குவதில்லை. சீட்டு வாங்குவதானால் வாங்கும் கூலி இதற்கே காணாது. அதனால், அவர்களாகவே ஒரு 'சிம்பிள் வழி' கண்டு பிடித்தார்கள்.

டிக்கட் பரிசோதகர் வந்தால் ஆளுக்கு 5 ரூபா லஞ்சம் கொடுத்து விடுவார்கள். ரயில் பயணச்சீட்டு இப்படியும் தனியார்மயமாகி விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த 5 ரூபா கூட அவர்களின் உழைப்பை, கூலியை வைத்து ஒப்பிட்டால் பெரிய தொகைதான்; ஆனால் பரிசோதகர்கள் சும்மா விட்டுவிடுவதில்லை, மிரட்டிப் பறித்து விடுவார்கள்.

''என்னோட பெரிய பையன் சில சமயம் சைக்கிளில் கொண்டு போய் ரயில்வே ஸ்டேசனுக்கு விடுவான். அன்றைக்கெல்லாம் அங்கேயே இருந்து கொண்டு ஏதோ கொஞ்சம் கூலிக்கு வேல கிடைச்சாலும் தேடிப் பிடிப்பான். என்னோட பொண்ணு வீட்டுல சமைக்கும். அடுத்தவன் அண்ணனுக்குச் சோறு கொண்டு போய்க் கொடுப்பான்'' என்று தன் குடும்பத்தின் பாடுகளைச் சொன்னார் பூரிபாய்.



**சிறு நகரங்களிலிருந்து இப்போதெல்லாம் பணம் பெரு நகரங்களுக்கு நகர்ந்து விட்டது. இங்கிருந்த மிச்சமீதி தொழில் நிறுவனங்களும் மூடப்பட்டுவிட்டன. சிறு நகரங்கள் கண்முன்னே அழிகின்றன. எனவே, சிறு நகரத்திலிருந்து கிராமம் நோக்கி வேலை தேடிப் போகிறார்கள் இந்த மக்கள்.**

இதையே வேறு வார்த்தைகளில் சொன்னார் கிசான்சபா செயலர் வால்டே: ''ஒருத்தர் கூலிக்கு மூணு பேர் உழைக்கிறாங்க பாருங்க.'' பூரிபாயின் கணவர் ஏதாவது வேலை கிடைத்துப் போனால், அதையும் சேர்த்து, ஒரு நாளைக்கு அந்தக் குடும்பத்திற்கு 100 ரூபாய் கிடைப்பதே பெரிசு. சில நாட்களில் - பெரியவனுக்கும் சரி, தந்தைக்கும் சரி - இரண்டு பேருக்கும் வேலை கிடைக்காமல் போய் விடும். ரேசன் கார்டு கூட இல்லாத அந்தக் குடும்பம் அப்படிப்பட்ட நாட்களில் தவித்துப் போகும்.

பயணத்தில் வழியேற ரயில் நிலையங்களில் கான்டிராக்டர்கள் மலிவான கூலிக்கு உழைப்பாளிகளைப் பிடிக்க, கழுகுபோலக் காத்திருந்தார்கள்.

•••

பூரிபாய், ரேவண்டா பாயோடு பயணம் செய்த நாங்கள் சால்வா நிலையத்துக்குப் போய்ச் சேர காலை 9 மணி ஆகிவிட்டது. அங்கிருந்து வேலை நடந்த கிராமம் ஒரு கி.மீ. தொலைவு; பிறகு வயல்களை நோக்கிப் போக கூடுதலாக ஒரு 3 கி.மீ. அந்த 3 கி.மீ. தொலைவும் தலையில் தண்ணீர்ப் பானையைச் சுமந்து கொண்டு பூரிபாய் போட்ட நடையோடு எங்களால் போட்டி போட முடியவில்லை.

அற்பக்கூலிக்கு அவர்கள் வேலை செய்த நிலத்தின் சொந்தக்காரர் பிரபாகர் வஞ்சாரேவுக்கும் போதாத காலம் தான். விவசாய நெருக்கடி அவரையும் பதம் பார்த்துவிட்டது. அவருக்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் இருந்தது; தவிர அவர் 10 ஏக்கரா குத்தகைக்கு எடுத்திருந்தார். ''கட்டுப்படியாகாத விற்பனை விலை எங்களையும் வயிற்றில் அடிக்கிறது'' என்றார் பிரபாகர். ''கிராமப்புற வறுமையைச் சமாளிக்க முடியாத பாரம்பரியக் குடிகளும் எங்கெங்கோ இடம் பெயர்ந்து விட்டதால்தான் திரோடாவிலிருந்து பொம்பிளை ஆட்களைக் கூலிக்கு வைக்கிறோம்'' என்றார் அவர்.

இந்தக் கிராமம் உள்ள இடம் கிழக்கு விதர்பா - தற்கொலைகள் பெருகி அழிந்து கொண்டிருக்கும் பிரச்சினைக்குரிய பருத்தி விளையும் பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது இப்பகுதி. வஞ்சாரே நெல் பயிரிடுகிறார். மிளகாய் போல வேறு சில பயிர்களும் போடுகிறார். தற்சமயம் அதற்குத்தான் ஆட்கள் வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும்வேலை முடிவதற்குள் பொழுது சாய்ந்துவிடும். பிறகு ஆட்கள்ரயிலடியை நோக்கி நடப்பார்கள் - அதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கும்.

அதற்குப் பிறகும் ஊர் திரும்பும் ரயில் வருவதற்காக ஒன்றரை மணி நேரம் காத்திருக்க வேண்டும். இரவு 8 மணிக்குத்தான் ரயில். திரோடா போய்ச்சேர 10 மணியாகும், அதற்குள் உறவுகள் உறங்கிப் போகும். விடியலில் வேலைக்கு அவர்கள் கிளம்பும் போதும் குடும்பம் உறங்கிக் கொண்டுதான் இருக்கும். ''இதுல எங்களுக்கு என்ன குடும்பம், என்ன வாழ்க்க, சொல்லுங்க'' என்று கேட்டார் ரேவண்டாபாய்.

காலையில் வீட்டிலிருந்து கிளம்பி, இரவு திரும்பி வந்து சேருவதற்குள்ளாக அவர்கள் சுமார் 170 கி.மீ. தூரம் பயணம் முடிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், வாரம் முழுக்க, ஒரு 30 ரூபாய் கூலிக்காக.

''11 மணிக்கு வீடு திரும்புவோம். சாப்புடுவோம், தூங்குவோம்'' - பூரிபாய் விவரித்தார். இதோ, இன்னமும் நான்கே மணிநேரம்தான் - மறுபடி அவர்கள் எழுந்திருக்க வேண்டும். மறுபடி ஓடத் தொடங்கி விடவேண்டும்.

கட்டுரையாளர்: பி. சாய்நாத்.
மூலம்: தி இந்து, 24.1.2007.
மொழியாக்கம்: பஷீர்.


படிப்பகம்

www.padippakam.com

1857 சுதந்திரப் போரை சிப்பாய்களின் கலகம் என்று அன்றைய பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதிவந்த போது, அதே லண்டனிலிருந்து அமெரிக்கப் பத்திரிகையான நியூயார்க் டெய்லி டிரிபியூனில் தொடர் கட்டுரைகள் எழுதி வந்த மார்க்ஸ், இந்திய விடுதலைப் போரின் உண்மைச் சித்திரத்தை உலகுக்கு வழங்கினார். எழுச்சி நடந்து கொண்டிருந்த அக்காலத்திலேயே இதனை விடுதலைப் போர் என்று மதிப்பிட்டார் காரல் மார்க்ஸ். அது மட்டுமல்ல, கும்பினி நடத்திய பகற்கொள்ளையையும், எழுச்சியை ஒடுக்க அவர்கள் கையாண்ட குரூரமான ஒடுக்குமுறைகளையும் அம்பலப்படுத்தினார். மார்க்சின் கட்டுரைகள், 'இந்தியாவைப் பற்றி மார்க்ஸ்' என்ற தலைப்பில் ஆங்கில நூலாக வெளிவந்திருக்கிறது.

இரண்டு நூற்றாண்டுகள் ஆன பின்வரும் காலனியாதிக்கத்தின் கொடூரமுகம் கடுகளவும் மாறவில்லை என்பதை இக்கட்டுரையைப் படிக்கும் வாசகர்கள் இதனை ஈராக் மீதான போருடனும், சதாம் தூக்கிலிடப்பட்ட சம்பவத்துடனும் ஒப்பிட்டுப் புரிந்து கொள்ளலாம். கீழே தரப்பட்டுள்ள காரல் மார்க்சின் கட்டுரை செப்.4, 1857 அன்று எழுதப்பட்டதாகும்.

# 1857

## பிரிட்டிஷ் நாகரிகக் கோமான்களின் காட்டுமிராண்டித்தனம்!

இந்தியாவில் எழுச்சி கொண்ட சிப்பாய்கள் செய்த அட்டூழியங்கள் உண்மையிலேயே திகைக்க வைக்கின்றன; பயங்கரமாக இருக்கின்றன; சொற்களால் வருணிக்க முடியாத அளவு கொடூரமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்களை ஆயுதந்தாங்கிய எழுச்சிப் போர்களில், தேசிய எழுச்சிப் போர்களில், இன மோதல்களில், எல்லாவற்றையும் விட மதம் சார்ந்த போர்களில்தான் பார்க்க முடியும்.

சுருக்கமாக விவரிப்பதானால், இப்போது இந்தியச் சிப்பாய்களின் நடவடிக்கைகளால் அதிர்ச்சியுற்றிருக்கிற கவுரவமிக்க இங்கிலாந்துதான் - மேன்மை தங்கிய பிரிட்டிஷ் மன்னரின் குதிரைப்படை வீரர்களை பிரெஞ்சு மன்னரின் படை தாக்கியதையும், ஃபிரான்சின் வேற்று மதத்தவர்களை ஸ்பானிய கொரில்லாக்கள் தாக்கியதையும், எல்லாவற்றையும் விட பிரெஞ்சுப் பாட்டாளிகளின் அருமைப் புதல்விகளும், புதல்வர்களும் தாக்கப்பட்டதையும் கைகொட்டி ரசித்துக்கொண்டாடியது.

இந்தியச் சிப்பாய்களின் செயல்கள் எவ்வளவு வெறுக்கத்தக்கதாக இருந்தாலும், அவை அத்தனையுமே இங்கிலாந்து இந்தியா மீது நடத்திய அட்டூழியங்களின் செறிவான, ஒட்டுமொத்தமான எதிர்வினைதான் - கீழைச் சாம்ராச்சியத்தை நிறுவிய கட்டத்தில் மட்டுமல்ல், நிலையான ஆட்சி நிலை நிறுத்தப்பட்ட கடந்த பத்தாண்டுகளில் நடந்ததும் அப்படிப்பட்டதே.

அந்த ஆட்சியை விவரிப்பதானால், சித்திரவதையே அதன் நிதிக் கொள்கையின் திரண்ட நிறுவனமாக இருந்தது. மனிதகுல வரலாற்றில் பழிவாங்குதல் என்ற ஒன்றுண்டு; வரலாற்று வெஞ்சினத்தின் விதி ஒன்றுண்டு - அதன் கருவியை, அடக்கப்பட்டவர்கள் அல்ல, அடக்குபவரேதான் உருவாக்குகிறார்கள்.

பிரெஞ்சுப் பேரரசுக்கு முதலடி விழுந்தது விவசாயிகளின் கரங்களிலிருந்தல்ல; பிரபுக்குலத்திலிருந்துதான். பிரிட்டிஷாரின் சித்திரவதைக்கும் அவமானத்துக்கும் ஆளாகி அம்மணமாக நிறுத்தப்பட்ட விவசாயிகளிலிருந்து இந்திய எழுச்சி தொடங்கவில்லை; அதே பிரிட்டிஷாரால் உடை, உணவு, சலுகைகள் ஊட்டப்பட்ட சிப்பாய்களிடமிருந்துதான் எழுச்சி தொடங்கியது.

சிப்பாய்களின் அட்டூழியங்களுக்கு ஒப்பீடுதேட சில லண்டன் ஏடுகள் பாசாங்கு செய்து எழுதுவது



1857 புரட்சியை தேசிய எழுச்சி என்று மதிப்பிட்ட காரல் மார்க்ஸ்.

போல நாம் மத்திய கால காட்டுமிராண்டித்தனத்துக்கோ, ஏன், சமகால இங்கிலாந்து வரலாற்றுக்கோ போய்த் தேடவேண்டாம்; நேற்று நடந்ததுபோல் தோன்றும் அந்த முதல் சீனப்போரின் சம்பவங்களை ஆராய்ந்தால்போதும்[1].

ஆங்கிலேயச்சிப்பாய்கள் வேடிக்கைக்காகச் செய்த அருவெறுக்கத்தக்க செயல்களைப் பாருங்கள் போதும்: எந்த ஒரு மதவெறி இயக்கமும் அதற்குப் புனிதப்பட்டம் கொடுக்கவில்லை; ஒரு இனம் அடக்கியதால் மற்றொரு இனம் கசப்போடும் வெறுப்போடும் அதற்கெதிராக எழுந்து செய்த பதில் வெறியாட்டமும் அல்ல அது; எதிரி வீரதீரமான கடும் எதிர்ப்பைக் காட்டியதால் தூண்டப்பட்டதுமல்ல.

அங்கு நடந்ததென்ன? பெண்களின் கற்பு சூறையாடப்பட்டது; பச்சிளங் குழந்தைகள் துடிக்கத் துடிக்க வெட்டி வீசப்பட்டன; இண்டு இடுக்கு விடாமல் கிராமம் கிராமமாகக் கொளுத்திச் சாம்பலாக்கப்பட்டன. இவை அத்தனையும் அவர்களுக்குச் சிறுபிள்ளை விளையாட்டு. கொடுமைகள் பற்றிய இந்தப் பதிவுகள் சீனர்களுடையதல்ல, அத்தனையும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் ஆவணங்களே!

இத்தனைப் பெரிய அழிவுக்கும் எல்லா வன்முறைகளுக்கும் காரணம் இந்தியச் சிப்பாய்கள்தான் என்றும், ஆங்கிலேயத் தரப்பில் அமுதமாய்ச் சுரந்தது பேரன்பென்றும் சொன்னால் அது பெரிய தவறாகி விடும்; அப்புறம் அப்பதிவை எப்போதுமே சரி செய்ய முடியாது போய்விடும். பிரிட்டிஷ் அதிகாரிகள் தான் கடிதங்கள் மூலம் வெறுப்பைக் கக்குகிறார்கள்.

ஓர் அதிகாரி பெஷாவரிலிருந்து விரிவாக எழுதுகிறான் — 55-வது

www.padippakam.com



1857- போர்க்களக் காட்சி

காலாப்படைமீது தாக்குதல் நடத்தச் சொல்லி 10-வது குதிரைப் படைக்கு உத்தரவு போட்டபோது, 10-ஆம் படை மறுத்துவிட்டதால் அப்படையிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்தானாம் அவன். அதுமட்டுமல்ல, ''அவர்களின் கோட்டுக்களையும் கழற்றினோம், பூட்களையும் பிடுங்கினோம், ஒவ்வொருவருக்கும் அபராதம் போட்டோம், பிறகு அவர்களை வெறுங்கால்களோடு ஆற்றங்கரை வரை இழுத்துச் சென்று படகுகளில் இறக்கி சிந்து நதியின் காட்டாற்று வேகத்தில்தள்ளிவிட்டோம்'' என்றும் பொங்கி வழியும் சந்தோசத்தோடு விவரிக்கிறான். ஒவ்வொருத்தனும் வெள்ளத்தில் மூழ்கிச் செத்திருப்பான் என்ற மகிழ்ச்சி அவன் எழுத்துக்களில் தெரிகிறது.

இன்னொருத்தன் எழுதுகிறான் — பெஷாவர் மக்களில் சிலர் தங்கள் குடும்பத் திருமண விழாவை பட்டாசு வெடித்துச் சந்தோசமாகக் கொண்டாடினார்களாம். இரவு நேரத்தில் அது அவர்களைப் பயமுறுத்திவிட்டதாம். அடுத்தநாள் காலை அவர்களை இழுத்துச் சென்று மரத்தில் கட்டி வைத்தார்கள்; அவர்கள் செயலுக்குத் தண்டனையாக ''அவர்கள் என்றுமே மறக்க முடியாதபடி சவுக்கடிகள் கொடுக்கப்பட்டன'' என்று எழுதுகிறான்.

ராவல்பிண்டியிலிருந்து உள்ளூர்த் தலைவர்கள் மூன்று பேர் சேர்ந்து சதி செய்வதாகத் தகவல் வர அந்தக் கூட்டத்துக்கு அரசு உளவாளியை அனுப்பி செய்தியை அறிந்து கொண்டான் சர் ஜான் லாரன்ஸ். உளவாளியின் அறிக்கைக்கு சர் ஜான் பதில் அனுப்பினான்: ''அவர்களை உடனே தூக்கில் போடுங்கள்'' அந்தத் தலைவர்கள் (விசாரணையே இல்லாமல்) தூக்கில் போடப்பட்டார்கள்.

அலகாபாத் அரசு அதிகாரி எழுதுகிறான்: ''எவர் ஒருவருடைய வாழ்வும் சாவும் எங்கள் கையில்தான். ஒரு பயலைக் கூட நான் விட்டுவைக்கவில்லை'' அதே இடத்திலிருந்து இன்னொரு அதிகாரி எழுதுகிறான்: ''சிப்பாய்கள் அல்லாத பொதுமக்களில் ஒவ்வொருநாளும் பத்துப் பதினைந்து பேரையாவது தூக்கில் போட்டு விடுகிறோம். போடாமல் ஒரே ஒருநாள் கூடக் கழிந்ததில்லை.'' இன்னொரு அதிகாரி மகிழ்ச்சி பொங்க எழுதுகிறான்: ''ஹோல்ம்ஸ் அவர்களை எல்லாம் 'செங்கல்' கட்டித் தொங்கவிடுவது போல எண்ணி எண்ணித் தூக்கில் போடுகிறான்.''



மனித குல வரலாற்றில் பழிவாங்குதல் என்ற ஒன்றுண்டு. வரலாற்று வெஞ்சினத்தின் விதி ஒன்றுண்டு. அதன் கருவியை, அடக்கப்பட்டவர்கள் அல்ல, அடக்குவோர்தான் உருவாக்குகிறார்கள்.

இன்னொருவன், கிராமத்து மக்களை ஒரே நேரத்தில் தூக்கில் போட்டதை இப்படி உருவகப்படுத்தி எழுதினான்: ''பிறகுதான் எங்கள் கொண்டாட்டம் ஆரம்பித்தது.'' மூன்றாவது ஆள் எழுதினான்: ''விசாரணையை நாங்கள் குதிரைமேல் இருந்தவாறே முடித்துவிட்டோம். வழியில் எங்கள் எதிர்ப்பட்ட ஒவ்வொரு கருப்பனையும் தூக்கில் போட்டோம், அல்லது சுட்டுத்தள்ளினோம்.''

பனாரசிலிருந்து எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, உள்ளூர் மக்களுக்கு ஆதரவாக இருந்த காரணத்துக்காகவே முப்பது ஜமீந்தார்கள் தூக்கில் போடப்பட்டார்கள்; அதே காரணத்துக்காக, பல கிராமங்கள் முழுக்க எரித்து அழிக்கப்பட்டன.[2] லண்டன் டைம்ஸில் பனாரசிலிருந்து ஓர் அதிகாரி எழுதிய கடிதம் வெளியிடப்பட்டது. அவர் சொல்கிறார்: ''உள்ளூர் மக்களோடு மோதிய ஐரோப்பியப் படைகள் கொலைகாரப் படைகளாகவே மாறிவிட்டன.''[3]

ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது — ஆங்கிலேயரின் வன்முறைகளையெல்லாம் போர்க்கால வீரச் செயல்களாக, எளிமையாகவும் வேகமாகவும் எழுதிச் செல்லும் அவர்கள் அருவெறுப்பு மிகுந்த உள் விவகாரங்களை மறந்தும் கூட எழுதவில்லை; அதேசமயம், உள்ளூர் மக்களின் கோபத்தை விவரித்தபோது, அவை அதிர்ச்சி ஊட்டுபவைதான் என்றாலும் கூட, அவற்றை வேண்டுமென்றே அளவுக்கதிகமாகப் பெரிசுபடுத்தி எழுதினார்கள்.

எடுத்துக்காட்டாக, ''தி டைம்ஸ்'' நாளேட்டில் நுணுக்கமான விவரங்களாக முதலில் வெளியாகி, பிறகு லண்டன் செய்தியாளரிடையே வலம் வந்த 'டெல்லி - மீரட் அட்டூழியங்கள்' பற்றித்தான் சொல்கிறேன், அந்தக் கட்டுக் கதைகள் முதலில் யாரால் தொடங்கப்பட்டன? சம்பவ இடத்திலிருந்து ஒரு ஆயிரம் மைல் தொலைவுக்கப்பால் மைசூர் அருகே பெங்களூரில் உள்ள ஒரு கோழைக் கிறித்தவப் பாதிரியிடமிருந்துதான் முதலில் அது செய்தியாக வந்தது.

டெல்லியில் நடந்த உண்மை நடப்புகளை வைத்துப் பார்க்கும்போது, ஓர் இந்துச் சிப்பாயின் கட்டற்ற கற்பனையைவிட, ஒரு ஆங்கிலேயப் பாதிரியின் மூளை மிகப் பயங்கரமான கொடூரங்களை உற்பத்தி செய்திருப்பது தெரிகிறது. மான்


படிப்பகம்

www.padippakam.com

செஸ்டர் அமைதி நிறுவனச் செயலர் சீனாவின் கேன்டன் குடியிருப்புகள் மீது வீசிய பழுக்கச் சிவந்த குண்டு களைவிட, ஒரு குகையில் அடைக்கப் பட்ட அராபியரை ஒரு பிரெஞ்சுத் தளபதி தீயிட்டு வறுத்ததைவிட, போர்க்களத்திலேயே ஒப்புக்கு விசா ரணை நடத்தி வார்க்கச்சையில் தொங்கவிட்டு பிரிட்டிஷ் படை வீரரை அவர் நாட்டு அதிகாரிகளே உயிரோடு தோலுரிப்பதைவிட, பிரிட் டன் சீர்திருத்தச் சிறைகளில் இரக்கப் பட்டுக் கொடுக்கிற கருவித் தண்ட னைகளைவிட மூக்கையும் முலை களையும் அறுத்த சிப்பாய்களின் கோரச் செயல்கள் அவர்களுக்கு அரு வெறுப்பு மிக்கதாக இருக்கிறது.

மற்ற எல்லா விசயங்களைப்போ லவே காலம், இடத்துக்குத் தகுந்தாற் போல கொடூரத்தின் பாணிகள் மாறிக் கொண்டுதான் இருக்கின்றன. பல திறப்பட்ட பண்புகள் நிறைந்த சீசர் ஆயிரக்கணக்கான காலிக் (Gallic) போர்வீரர்களின் வலது கரங்களை வெட்டி வீசி எறியத் தான் உத்தரவிட் டதை விலாவாரியாக விளக்குகிறான்; ஆனால், நெப்போலியன் இப்படிச் செய்ய மனம் கூசியிருப்பான் - குடியர சுவாதிகள் என தன்படையில்தான் சந் தேகித்தவர்களை கண் காணாத புனித டொமிங்கோவுக்குக் கப்பலேற்றி அனுப்பினான் அவன்; அங்கே பிளேக் போன்ற கொடிய நோய்கள் பீடித்து அப்படியே அவர்கள் செத்துப் போவதைத்தான் அவன் விரும்பி னான்.

சிப்பாய்கள் செய்த மோசமான மூக்கறுப்பும் பிறவும் கிறித்தவ சம யஞ்சார்ந்த பண்டைய கீழை ரோம சாம்ராச்சியப் பழக்கங்களையோ, அல்லது, ஐந்தாம் சார்லஸ் மன்ன னின் குற்றவியல் சட்டங்களில் விதிக் கப்பட்ட தண்டனைகளையோ, அல் லது, ராஜத்துரோகத்துக்கு ஆங்கிலே யர் வழங்கிய தண்டனைகளையோ தான் நினைவூட்டுகின்றன; அவை இன்றளவும் ஆங்கிலேய நீதிமான் பிளாக்ஸ்டோனால் பதிவு செய்யப் பட்டுள்ளன.

தம்மைத்தாமே வருத்திக் கொள் ளும் கலையையே ஒரு மதக் கோட்பா டாகக் கொண்டிருக்கும் இந்துக்கள் தங்கள் எதிரிகளை இவ்வாறு சித்திர வதை செய்வதை மிகவும் இயல்பா கவே கருதியிருக்கக்கூடும். ஆங்கிலே யர்களுக்கும் கூட இது இயல்பாகத் தான் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால், "தேர்ச்சக்கரத்தில் தலைகொடுத்துச் செத்தால் நேரே சொர்க்கம் போகலாம்" என்ற இந்து மதத்தின் கொடூரமான ரத்தப்பலிச் சடங்குக்குத் துணைநின்று பாதுகாப்பு கொடுத்து, அந்தத் திருவிழாவி லிருந்து வரியும் வசூலித்தவர்கள் அல்லவா இவர்கள்!

'லண்டன் டைம்ஸ்' நாளேடு ரொம்பவும் அலட்டிக் கொள்கிறது... அதற்கு என்ன வேண்டுமாம்? கணக் குகளை விரிவாக எழுதி, அரசாங் கத்தை எப்படியாவது மூடி மறைத் துக்காப்பாற்ற வேண்டும், அவ்வளவு தானே? படை எடுத்து வென்றவர் எக் காளம் எடுத்து ஊதிய உடனே 'ஜெரிச்சோ' சுவர்கள் பொடிப் பொடி யாக நொறுங்கி விழுகிறதே பைபி ளில், அதுபோல டெல்லி வீழ்ந்துவிட வில்லை; அதனால்தான் ஆங்கிலேய அதிகாரி ஜான்புல் 'பழிதீர்ப்பேன்' என்று வாய்கிழியக் கத்தினான். அவ னது அரசாங்கம்தானே முன் செய்த அத்தனைக் கொடுஞ்செயலுக்கெல் லாம் காரணம்? அதுதானே இப் போது பிரம்மாண்டமாக வளர்ந்து பேரழிவாய் வெடித்திருக்கிறது? அவ னும் அவனைச் சுற்றியிருப்பவரும் கத்தித் தீர்த்துவிட்டால் காரணம் மறந்துவிடுமா? இல்லாமல் போய் விடுமா?

*தமிழில்: புதூர் இராசவேல்*

## 1857 – பிரிட்டிஷ் சீமாட்டிகளின் துயரம்! மார்க்சின் எழுத்தில் ஒரு ஏளனச் சித்திரம்!

"இங்கே உள்ளூர் வேலையாட்களே கிடைப்பதில்லை என்பது பெரும் துன்பமாக உள்ளது. நம்முடைய சீமாட்டிகள் குழந்தைகளைத் தாங்களே கவனிக்க வேண்டியிருக்கிறது. துணியைக்கூட அவர்களே துவைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. போதாததற்கு வேலையாட்கள் உதவியில்லாமல் சமைத்துக் கொள்ளவும் வேண்டியிருக்கிறது"

பிரிட்டிஷ் பத்திரிகையொன்றில் வெளிவந்த இந்தக் கடிதத்தை மேற்கோள் காட்டி அதனைக் கீழ்க்கண்டவாறு எள்ளி நகையாடுகிறார் மார்க்ஸ்:

"கேட்டீர்களா, லக்னோவின் ஆங்கிலேயச் சீமாட்டிகளுக்குத்தான் எத்தனை துன்பங்கள்! உண்மைதான். பேரரசுகள் ஒரே நாளில் ஆவதும் அழிவதுமான இந்தக் காலத்தில், புரட்சிகளும் வர்த்தக நெருக்கடிகளும் சேர்ந்து மனித சுகபோகங்களின் நிரந்தரத்தன்மையை அற்புதமான முறையில் நிச்சயமற்றதாக்கும் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில், யாரோ ஒருமுன்னாள் அரசி தன்னுடைய காலுறையைத் தானே தைத்துக் கொள்ளவேண்டியிருப்பது பற்றியும், துவைத்துக் கொள்ளவேண்டியிருப்பது பற்றியும், தனக்குத் தேவையான கொத்துக்கறியைத் தானே சமைத்துக் கொள்ளவேண்டியிருப்பது பற்றியும் வருத்தப்படும்போது, அது குறித்து நம்மால் இரக்கப்படமுடியவில்லையே, என்ன செய்வது?.... அடேயப்பா, கேட்கும்போதே ரத்தம் கொதிக்கிறதே! இந்திய வேலைக்காரர்களே இல்லாமல் தன்னுடைய குழந்தையைத் தானே பார்த்துக் கொள்ளவேண்டியிருக்கிறதாம்! எப்பேர்ப்பட்ட கொடுமை!"

**அடிக்குறிப்புகள்:**

1 கார்ல் மார்க்ஸ் இங்கே குறிப்பிடு வது சீனாமீது பிரிட்டன் நடத்திய வெறிகொண்ட போர்; இந்தப்போர் (1839-1842) முதல் அபி னிப்போர் என்று அறியப்படும். அந்த ஆண்டுகளில்தான் சீனா அரைக்காலனிய நிலைக்கு கீழே இறக்கித்தள்ளப்பட்டது.

2 பிரிட்டிஷ் கம்பெனியின் ஊழியர் போலாநாத் சந்திரா என்பவர் பிரிட் டிஷ் படைகள் வாரணாசியில் செய்த அக்கிரமங்களை விவரிக் கும்போது, பனாரசில் மட்டும் 6000 பேர் தூக்கில் போடப்பட்ட தாகச் சொல்கிறார். ஆதாரம்: "ஓர் இந்துவின் பயணங்கள்", தொகுப்பு, டால்பாய் வீலர். இப் பகுதி கேயே என்ற பிரிட்டிஷ் வர லாற்றிஞரின் 'சிப்பாய்ப் போரின் வரலாறு' பகுதி 2 (லண்டன், 1881), பக். 668-69-ல் மேற் கோள் காட்டப்பட்டுள்ளது.

3 ஆர்.எச். பார்ட்ரம், 13.7.1857, தி டைம்ஸ், எண் 22775, 2.9.1857, மார்க்ஸ், ஏங்கெல்ஸ், திரட்டப் பட்ட படைப்புகள், தொகுதி 15, பக். 355, அடிக்குறிப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# கார்ப்பரேட் பார்ட்டி ஆஃப் இந்தியா (டாடாயிஸ்ட்)

CPI(M)

**சொ**ல்லில் கம்யூனிசம், செயலில் முதலாளித்துவம் என்ற நடைமுறையைக் கொண்டிருப்போரை போலி கம்யூனிஸ்டுகள் என்று அழைப்பதில் நமக்கு தயக்கமிருந்ததில்லை. ஆனால், சொல்லிலும் செயலிலும் முரண்பாடு ஏதுமின்றி ''சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்'' என்று கொள்கைக் குன்றுகளாக வலம் வரும் 'மார்க்சிஸ்டு'களை இனிமேலும் போலி கம்யூனிஸ்டுகள் என்றே அழைத்துக் கொண்டிருப்பது பொருத்தம் தானா என்ற ஐயம் ஏற்படுகிறது.

''முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் அதற்கு கம்யூனிசச் சொற்களால் விளக்கமளிக்க வேண்டும்; அத்தகைய விளக்கம் முதலாளி வர்க்கத்தின் கோபத்தைத் தூண்டிவிடும்படி இருக்கக் கூடாது; அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கத்திடம் அதிருப்தியையும் தோற்றுவித்து விடக் கூடாது.'' — இப்படியாக, கம்பி மேல் நடப்பதையும், கடுகைத் துளைத்து ஏழ்கடல் புகுத்துவதையும் விடக் கடினமானதும் அபாரமான மொழி வல்லமையையும், ராஜதந்திரத்தையும், கலைத்திறனையும் கோருவதுமான இந்தச் சாகசத்தைத் தொடர்ந்து நிகழ்த்த வேண்டியிருக்கும் நிர்ப்பந்தத்திலிருந்து சிங்குர் பிரச்சினை 'மார்க்சிஸ்டு'களை விடுவித்திருக்கிறது. தங்களுடைய 'உண்மை'யான சிந்தனையை இயல்பாகப் பேசுவதற்கான சுதந்திரத்தையே ஒரு நிர்ப்பந்தமாக 'மார்க்சிஸ்டு'களின் மீது திணித்திருக்கிறது சிங்குர்.

எனவே, ''விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி, டாடாவுக்கும் ஜின்டாலுக்கும் ரூயாவுக்கும் மலேசியாவின் சலீம் குழுமத்திற்கும் வழங்குவது நியாயம்தானா'' என்று மார்க்சிஸ்டுகளிடம் இனிமேலும் கேட்டுக் கொண்டிருப்பது அசட்டுத்தனம். 'மார்க்சிஸ்டு'களின் இந்தப் புதிய நிலச் சீர்திருத்தக் கொள்கையைப் புரிந்து கொள்ளவேண்டுமானால், இந்தக் கொள்கை பிறப்பெடுக்கும் மூளைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய கூற்றுகள் வழியாகவே அதனைப் புரிந்து கொள்வோம்.

•••

**'மா**ர்க்சிஸ்டு' கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான பீப்பிள்ஸ் டெமாக்ரசி, வார இதழில் (செப்.11, 2006) அவர்களது கட்சியைச் சார்ந்த பொருளாதார வல்லுநர் பிரபாத் பட்நாயக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். 'வக்கிரப் பொருளாதாரத்தின் தாக்குதல்' (The Assault of Vulgar Economy) என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள கட்டுரை, ''தேசிய உற்பத்தி வளர்ந்தால் வறுமை ஒழிந்து விடும், செல்வம் பெருகினால் வறுமை ஒழிந்து விடும்'' என்று கூறும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பொய்களை அம்பலப்படுத்துகிறது.

> "ஒரு முனையில் செல்வம் குவிவது என்பதன் பொருள், அவ்வாறு செல்வம் குவிவதன் விளைவாக வறுமையும் உழைப்பின் துயரமும் அடிமைத்தனமும் இன்னொரு முனையில் அதிகரிப்பது என்பதுதான்" என்கிறார் மார்க்ஸ். ஆனால் "செல்வம் உருவாவதுதான் மக்கள் நலனுக்கு முன் நிபந்தனை என்பதை நாங்கள் அறிவோம்" என்று கல்கத்தா முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் பேசியிருக்கிறார் யெச்சூரி.

எந்த அறிவியல்பூர்வமான அடிப்படையோ, ஆதாரமோ இல்லாத இந்தப் பொருளாதாரக் கொள்கையை வக்கிரப் பொருளாதாரம் என்று மார்க்ஸ் அழைத்ததை அக்கட்டுரையில் விளக்கும் பட்நாயக், இது ஒரு முதலாளித்துவப் பித்தலாட்டம் என்று ஆணியடித்தாற் போலக் கூறி முடிக்கிறார்.

பட்நாயக் அடித்த ஆணியை இரண்டே வரிகளில் கிடுக்கிப்பிடி போட்டுப் பிடுங்கி எறிகிறார் யெச்சூரி. ''கார்ப்பரேட் முதலாளிகளின் வளர்ச்சியைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிப்பதில்லை என்பது ஒரு தவறான அபிப்ராயம், உண்மை அதுவல்ல. ஏனென்றால் செல்வம் உருவாவதுதான் மக்கள் நலனுக்கு முன்நிபந்தனை என்பதை நாங்கள் அறிவோம்'' என்று கல்கத்தா முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் பேசியிருக்கிறார் 'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி. *(இந்து, ஜன. 5, 2007)*

செல்வம் உருவாவதுதான் மக்கள் நலனுக்கு முன்நிபந்தனையாம்!

இதையே கொஞ்சம் எளிமையாக ரஜினிகாந்த் படத்தின் வசன மொழியில் சொல்வதென்றால், முதலாளி நல்லா இருந்தாத்தானே தொழிலாளி நல்லா இருக்க முடியும் என்று சொல்லலாம். அதாவது, பணக்காரர்கள் எந்த அளவுக்கு அதிகரிக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஏழ்மை ஒழியும் என்கிறார் யெச்சூரி.

•••

**மா**ர்க்ஸ் இதைப் பற்றி என்ன சொல்கிறார்? ''ஒரு முனையில் செல்



படிப்பகம்

www.padippakam.com

வம் குவிவதே என்பதன் பொருள், அதே நேரத்தில், அவ்வாறு செல்வம் குவிவதன் விளைவாக வறுமையும் உழைப்பின் துயரமும் அடிமைத்தனமும் அறியாமையும் கொடூரமும் சிந்தனைச் சீரழிவும் இன்னொரு முனையில் அதிகரிப்பது என்பதுதான்'' என்று கூறும் மார்க்ஸ், வறுமை என்பதே ஒரு குறிப்பிட்ட சமூக உறவின் வெளிப்பாடுதான் என்பதை நிலைநாட்டுகிறார். தொழிலாளிகள் எந்த அளவுக்கு செல்வத்தை உற்பத்தி செய்கிறார்களோ, அந்த அளவுக்கு வறியவர்கள் ஆக்கப்படுவார்கள். உற்பத்திச் சாதனங்களைத் தம் உடைமையாக வைத்திருக்கக்கூடிய முதலாளிகள் ஒருபுறம், உழைப்பை விற்று வயிற்றைக் கழுவும் தொழிலாளிகள் மறுபுறம் என்று இருக்கும் முதலாளித்துவச் சமூக அமைப்பில் செல்வம் உருவாவது என்பதன் உடனடி விளைவு வறுமைதான் என்பதே மார்க்சியப் பொருளாதாரத்தின் அரிச்சுவடி.

உலகத்தைக் கண்திறந்து பார்ப்பவன் எவனும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம். அல்லது, தங்கள் கட்சியின் மத்தியக் குழு சமீபத்தில் வெளியிட்டுள்ள தீர்மானத்தைப் படித்துப் பார்த்தும்கூட மார்க்சிஸ்டு கட்சித் தொண்டர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

''தேசிய நிகர உற்பத்தி கடந்த 3 ஆண்டுகளாக ஆண்டுக்கு 8 சதவீதம் வளர்ந்து வருவதாக மைய அரசு பெருமை கொள்கிறது. ஆனால் இது உண்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லை... இந்த வளர்ச்சியின் விளைவாக பணக்காரர்கள்தான் பெரும் பணக்காரர்கள் ஆகியிருக்கிறார்கள். ஃபோர்ப்ஸ் பத்திரிகையின் கூற்றுப்படி, 40 பணக்கார இந்தியர்களின் சொத்து மதிப்பு கடந்த ஒரே ஆண்டில் 61 பில்லியன் டாலரிலிருந்து 106 பில்லியன் டாலராக உயர்ந்திருக்கிறது. அரசாங்கப் புள்ளிவிவரப்படியே கூட 30 கோடி மக்கள் நாளொன்றுக்கு 45 ரூபாய் கூட வருமானமின்றி வறுமையில் உழல்கிறார்கள்'' என்று கூறுகிறது மத்தியக் குழு தீர்மானம்.

மக்கள் மென்மேலும் வறுமையில் தள்ளப்படுவதுதான் முதலாளித்துவச் சமூகத்தில் செல்வம் உருவாவதற்குரிய முன்நிபந்தனை. ஆனால் யெச்சூரியோ, செல்வம் உருவாவதுதான் மக்களை வறுமையிலிருந்து மீட்பதற்கான முன்நிபந்தனை என்று



மகாராட்டிரத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலம்: அம்பானிக்கு எதிராக யெச்சூரியின் போர்முரசம்!

ப.சிதம்பரத்தின் சித்தாந்தத்தை அப்படியே வழிமொழிகிறார்.

''வக்கிரப் பொருளாதாரத்தை முன்மொழிபவர் நம்முடைய ஆதரவு பெற்ற பிரதமர் என்பதால் நாம் சும்மா இருந்து விட முடியாது'' என்று கொதிக்கிறார் பட்நாயக். அவரே நம்முடைய தோழர் புத்ததேவ் பட்டாசார்யாவாக இருக்கும்போது என்ன செய்வதாம்?

சிங்குர், நந்திக்கிராமம் பிரச்சினைகளில் மார்க்சிஸ்டு அரசின் அணுகுமுறையைக் கண்டித்து இடதுசாரி வரலாற்றாசிரியர் சுமித் சர்க்கார், அருந்ததி ராய், ராஜேந்திர சச்சார் உள்ளிட்ட அறிவுத்துறையினர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கைக்குப் பதிலளிக்கு முகமாக பகிரங்கக் கடிதமொன்றை அவர்களுக்கு எழுதியிருக்கிறார் முதல்வர் புத்ததேவ். *(பைனா. எக்ஸ். ஜன. 19, 2007.)* விவசாயிகளிடமிருந்து ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பிடுங்கி டாடாவுக்கு வழங்க நேர்ந்ததற்கான பொருளாதார நியாயத்தை அக்கடிதத்தில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

''சிங்குரில் இருக்கும் அந்தச் சில துண்டு நிலங்களில் விவசாயம் செய்து கிடைக்கக்கூடிய வருவாயைக் காட்டிலும் மிகப் பன்மடங்கு அதிகமான பொருளாதார ஆதாயத்தை



அதே அம்பானியுடன் மேற்கு வங்கத்தில் புத்ததேவ் சரசம்!

www.padippakam.com

இந்தத் தொழிற்சாலை வழங்கும்'' என்கிறார் புத்ததேவ்.

உண்மைதான். 250 ஏக்கர் நிலத்தில் ஆண்டொன்றுக்கு 10 லட்சம் கார்களை டாடா அறுவடை செய்வார்; பல கோடி ரூபாய்களை மூட்டை கட்டுவார். விவசாயிகள் மிஞ்சிப் போனால் எத்தனை கலம் நெல்லை அறுத்துவிடுவார்கள்? எத்தனை ரூபாயை மூட்டை கட்டிவிடுவார்கள்?

புத்ததேவின் இந்தக் கூற்றைத்தான் ''வக்கிரப் பொருளாதாரத்தின் உச்சகட்டம்'' என்று சாடுகிறார் பட்நாயக். ''கேக் எந்த அளவுக்குப் பெரிதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அது எல்லாருக்கும் நல்லது என்று கூறுவது, வறுமையென்பது குறிப்பிட்ட சமூக உறவின் விளைவுதான் என்ற உண்மையையே இருட்டடிப்பு செய்வதாகும்'' என்கிறார்.

''தொழிலாளர்கள் எந்தப் பாத்திரத்திலிருந்து எடுத்து உண்கிறார்களோ அது தேசிய உழைப்பின் முழு உற்பத்தியாலும் நிரம்பியிருக்கையில், அதிலிருந்து அவர்கள் அதிகமாக எடுத்துக் கொள்வதைத் தடுப்பது பாத்திரத்தின் அளவுக் குறைவோ அல்லது அதிலுள்ள பண்டங்களின் போதாமையோ அல்ல; தொழிலாளர்களுடைய கரண்டிகள் சிறிதாக இருப்பதுதான்'' என்றார் மார்க்ஸ்.

டாடா தொழிற்சாலை வழங்கவிருக்கும் பன்மடங்கு ஆதாயத்தை அறுவடை செய்யப்போவது யார்?

சிங்குரின் நேற்றைய விவசாயிகளா, அல்லது நாளை அங்கே வேலைக்குச் சேரவிருக்கும் தொழிலாளிகளா?

சிங்குரின் 1000 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பவர்கள் 1320 குத்தகை விவசாயிகள், சுமார் 3000 நிலமற்ற கூலி விவசாயிகள், காய்கனி வியாபாரம், கால்நடை வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் 4475 பேர், வெளியூர்களிலிருந்து இங்கு வந்து வேலை செய்யும் சுமார் 5000 தொழிலாளர்கள். இந்த 12,000 பேருக்கு டாடா ஆலை வழங்கப்போவது என்ன?

ஆலையைச் சுற்றி அமையவிருக்கும் அபார்ட்மென்டுகளில் விவசாயிகள் செக்யூரிட்டி வேலை பார்க்கலாம். சிறு வியாபாரிகள் அயர்ன் வண்டி தள்ளலாம், நாற்று நட்ட பெண்கள் அபார்ட்மென்டு அம்மணிகளுக்குத் துணி துவைத்துப் போடலாம். இவ்வாறாக மேட்டுக்குடி வர்க்கத்துக்குப் பலவிதமாகச் சேவை செய்து அவர்கள் வழங்கும் மிச்சம் மீதியை வாங்கித் தின்னலாம். இது தான் டாடா ஆலை உருவாக்கவிருக்கும் பன்மடங்கு ஆதாயத்தில் அப்பகுதி மக்களுக்குக் கிடைக்கப் போகும் பங்கு.

•••

''ஆயிரக்கணக்கானோர் வேலை தேடி அலைகிறார்கள், அவர்களை நாம் கைவிட்டு விட முடியுமா?'' என்று தன் கடிதத்தில் உணர்ச்சி பொங்கக் கேள்வி எழுப்புகிறார் புத்ததேவ். தன்னுடைய சுரண்டலுக்காகவும் லாப நோக்கத்துக்காகவும் அன்றி




வேறு எந்தச் சமூக நோக்கத்துக்காகவும் ஒரு முதலாளி தொழிற்சாலையைத் தொடங்குவதில்லை. மார்க்சியம் தெரியாத பாமரத் தொழிலாளிக்குக் கூடத் தெரிந்திருக்கும் இந்த உண்மை புத்ததேவுக்கு மறந்துவிட்டது போலும்! முதலாளி வர்க்கத்தின் ஆவி புத்ததேவுக்குள் புகுந்து கொண்டு அவரைச் சாமியாட வைக்கிறது.

12,000 பேரை வேலையைவிட்டு விரட்டிய இந்த ஆலை எத்தனை ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும்? கிட்டத்தட்ட இதே அளவு மூலதனத்துடன் சென்னையில் இயங்கிவரும் ஃபோர்டு, ஹூண்டாய் ஆலைகள் ஆயிரத்துக்கும் குறைவான தொழிலாளர்களுக்குத்தான் வேலை வாய்ப்பை வழங்கியிருக்கின்றன. தினக்கூலிகளையும் துணைத் தொழில்களில் ஈடுபட்டிருப்போரையும் சேர்த்தால் கூட வேலை வாய்ப்பு ஓரிரு ஆயிரங்களைத்தாண்டாது.

பல்லாயிரம் பேருக்கு வேலை வழங்குவதற்கு சிங்குரில் அமையவிருப்பது சைக்கிள் தொழிற்சாலை அல்ல. கார் உற்பத்தி என்பதே உயர் தொழில்நுட்பம் சார்ந்தது. டாடாவோ குறைந்த விலையில் (ஒரு லட்சம் ரூபாயில்) கார்தயாரிக்கவிருக்கிறார். அதி உயர் தொழில் நுட்பம் இல்லாமல் இந்த விலைக் குறைப்பு சாத்தியமில்லை. உயர் தொழில் நுட்பம் இருந்தாலோ வேலை வாய்ப்பு சாத்தியமில்லை. உற்பத்திச் செலவைக் குறைப்பது என்ற பெயரில் தொழிலாளிகள் கசக்கிப் பிழியப் படாமல் குறைந்த விலையிலான கார் சாத்தியமே இல்லை. இவையனைத்தும் மிக எளிய பொருளாதார உண்மைகள்.

ஆனால் உண்மைகள் யாருக்கு வேண்டும்? ''ஒரு கருத்தாக்கம் அறிவியல் பூர்வமாகச் சரியாக இருக்கிறதா என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை. சர்வதேச நிதிமூலதனத்துக்கும், அதன் கூட்டாளிகளான இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் அந்தக் கருத்தாக்கம் உகந்ததாக இருக்கிறதா இல்லையா என்பதுதான் வக்கிரப் பொருளாதாரம் நிர்ணயிக்கும் அளவுகோல்'' என்று தனது கட்டுரையில் சாடுகிறார்பட்நாயக்.

சிங்குர் பிரச்சினை குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு நியாயமாகவோ, அறிவியல் பூர்வமாகவோ பதிலளிக்க முடியாத புத்ததேவ், சென்டிமென்டுக்குத் தாவுகிறார். ''ரத்தன் டாடாவை நான் அரும்பாடுபட்டு அழைத்து வந்தேன். சிங்குர் நிலம் இல்லை என்று நான் டாடாவிடம் எப்படிச் சொல்ல முடியும்? இந்தத் திட்டம் மட்டும் நிறைவேறாவிட்டால் நான் தலைநிமிர்ந்து நடக்கவே முடியாது,'' *(இந்து, டிச.27, 2006)* என்று கூறி டாடா என்ற முதலாளியின் வியாபாரப் பிரச்சினையை, தன்னுடைய மானப் பிரச்சினையாக மாற்றுகிறார்.

''இத்தனைப் பிரச்சினைகள் இருக்கும்போது ஆலையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டியது தானே'' என்று கேள்வி எழுப்பிய போது, ''டாடா நிறுவனத்துக்கும் மேற்கு வங்க அரசுக்கும் இடையே



படிப்பகம்

www.padippakam.com

ஒரு உணர்ச்சிபூர்வமான உறவு இருக்கிறது'' *(இந்து, நவ. 26, 2006)* என்று பதிலளித்திருக்கிறார் டாடா நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ரவி காந்த்.

இலாப உணர்ச்சி தவிர வேறெந்த உணர்ச்சியையும் அறியாத முதலாளி வர்க்கம் இந்த அளவுக்கு உணர்ச்சி வயப்படுவதிலிருந்தே, காப்பியச் சிறப்பு மிக்க இந்த உணர்ச்சிப் போராட்டத்தில் பல நூறு கோடி ரூபாய்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

''நாங்கள் 6 இடங்களைக் காட்டினோம். சிங்குர் தான் வேண்டும் என்று டாடா நிறுவனம் கூறிவிட்டது'' என்று உண்மையைப் போட்டு உடைத்துவிட்டார் 'மார்க்சிஸ்டு' எம்.பி.நீலோத்பல் பாசு. அவர்கள் விரும்பிய சிங்குர் நிலம் 120 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தைக் கொடுத்து வாங்கப்பட்டு 20 கோடி ரூபாய்க்கு டாடாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கார் தொழிற்சாலைக்கு 250 ஏக்கருக்கு மேல் தேவையில்லை எனும்போது 1000 ஏக்கர் எதற்கு என்ற கேள்விக்கும் பதில் இல்லை. தண்ணீர், மின்சாரம், சாலைகள் முதலான வற்றில் இன்னும் என்னென்ன சலுகைகள் டாடாவுக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற கேள்விகளுக்கும் பதில் இல்லை. இந்த விவரங்களைப் பகிரங்கப்படுத்துவது நட்புக்கு இலக்கணமாகாது என்று புத்ததேவ் கருதுகிறார்போலும்!

தகவல் அறியும் உரிமையின் கீழ் விவரம் கேட்டவர்களுக்கு ''வணிக இரகசியம்'' என்று கூறி பதிலளிக்க மறுத்துவிட்டது 'மார்க்சிஸ்டு' அரசு. அனில் அம்பானியுடனான பாசப் பிணைப்புக்காக 10,000 ஏக்கர் விளை நிலத்தை வழங்கியிருக்கும் முலாயம் சிங்கும் கூட ''வணிக இரகசியம்'' என்று கூறித்தான் விவரம் தர மறுக்கிறார்.

எல்லா உறவுகளும் அவற்றுக்குரிய உணர்ச்சிகளை இழந்து, விற்கவும் வாங்கவுமான பண்டங்களாக மாறிவரும் இந்தக் காலத்தில் உணர்ச்சிமயமான உறவுகளை உருவாக்கும் வல்லமை வணிகத்துக்கு மட்டும் தான் இருக்கிறது போலும்! புத்ததேவுக்கும் டாடாவுக்கும் இடையிலான இந்த கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் உறவைத் தாங்கி நிற்பவை எத்தனை சைபர்கள் என்ற உண்மை வெளிவராமலேயே போய்விடுமா என்ன?

•••

**சி**ங்குர் நிலத்தை டாடாவுக்கு வழங்க முடியாமல் போய்விடுமா என்ற கேள்வி எழுந்தாலே உணர்ச்சி வயப்படுகிறார் புத்ததேவ். ஆனால் அவர் கண்களிலிருந்து நிலத்தை இழந்த விவசாயிகளுக்காக ஒரு துளி கண்ணீர் கூடக் கசியவில்லை. ''பொருளாதார வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கு என்பது விவசாயத்திலிருந்து தொழில்துறையை நோக்கித் தான் சென்றாக வேண்டும். இது மார்க்சிஸ்டுகளுக்கு மட்டும் பொருந்தாதா என்ன?'' என்று சுமித் சர்க்காருக்கு எழுதிய கடிதத்தில் கேள்வி எழுப்புகிறார் புத்ததேவ். ''தொழில்மயமாகும் போது விவசாய நிலங்களை இழப்பதென்பது ஒரு இயற்கையான நிகழ்ச்சிப் போக்குதான்'' என்று நமக்கு அறிவொளி ஊட்டுகிறார் யெச்சூரி.

**சிங்குரில் இருக்கும் அந்தச் சில துண்டு நிலங்களில் விவசாயம் செய்து கிடைக்கக் கூடிய வருவாயைக் காட்டிலும் மிகப் பன்மடங்கு அதிகமான பொருளாதார ஆதாயத்தை இந்தத் தொழிற்சாலை வழங்கும் என்கிறார் புத்ததேவ். அந்த ஆலை வழங்கவிருக்கும் இந்தப் பன்மடங்கு ஆதாயத்தை அறுவடை செய்யப் போவது யார்? சிங்குரின் நேற்றைய விவசாயிகளா, நாளை அங்கே வேலைக்குச் சேரவிருக்கும் தொழிலாளிகளா அல்லது டாடாவா?**

எப்பேர்ப்பட்ட இயற்கையான நிகழ்ச்சிப் போக்கு! 'இயற்கையான' சந்தை விதிகளுக்கு மாறாக அரசாங்கம் தலையிட்டு நிலத்துக்கு விலை நிர்ணயம் செய்து சட்டமியற்றி, அதைத் தரகுமுதலாளிக்குச் சொந்தமாக்கும் இயற்கையான நிகழ்ச்சிப் போக்கு! அந்த ஊருக்குள்ளேயே யாரும் நுழையக்கூடாது என்று 144 போட்டும் அடியாள் படையை ஏவியும் குண்டுவீசியும் விவசாயத்தைத் தொழில்மயமாக்கும் இயற்கையான நிகழ்ச்சிப் போக்கு!

''சிங்குரின் 997 ஏக்கர் நிலத்திற்கு 17,000 சிறு உடைமையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமெல்லாம் ஒப்புதல் கேட்டு ஒரு தனியார் முதலாளி (டாடா) நிலத்தை வாங்கவேண்டுமென்றால் அதற்கு இன்னொரு யுகமே ஆகிவிடும்'' என்று இந்த நிலப்பறிமுதலை நியாயப்படுத்துகிறார் மேற்கு வங்க அரசின் வணிகத் துறைச் செயலர். *(பைனா. எக்ஸ், ஜன.18, 2007.)*

எனவேதான், 1894-இல் வெள்ளைக்காரனால் போடப்பட்ட நிலப் பறிமுதல் சட்டத்தை வைத்து சிங்குர் நிலங்களைக் கைப்பற்றியிருக்கிறது 'மார்க்சிஸ்டு' அரசு. இது இயற்கையான நிகழ்ச்சிப் போக்கென்றால், ஈராக் ஆக்கிரமிப்பும் கூட இயற்கையான நிகழ்ச்சிப் போக்குதான். இதன்படி, கலிங்க நகர்துப்பாக்கிச்சூட்டில் இறந்த பழங்குடி மக்களும், நர்மதா அணையின் அகதிகளும்கூட இயற்கைக் கொடுமைகளுக்குப் பலியானவர்கள்தான் போலும்!

சின்னமீனைப் பெரியமீன் விழுங்கும் இந்த இயற்கையான நிகழ்ச்சிப் போக்கை அனுமதிக்கும் படிதான் வால் மார்ட்டும் கூடக் கோருகிறது. வளர்ந்துவிட்ட உற்பத்திச் சக்திகளுக்குத் தீனி போட உலகச் சந்தையைத் திறந்துவிடச் சொல்லும் பன்னாட்டு நிறுவனங்களின் கோரிக்கையும் அதை நிறைவேற்றுவதற்காகவே உருவாக்கப்பட்டிருக்கும் காட் ஒப்பந்தமும் கூட இயற்கையான நிகழ்ச்சிப் போக்குகள்தாம்.


இந்த இயற்கையான நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படையில், சிங்குர், நந்திக்கிராமம் விவசாயிகளுக்கு மட்டுமல்ல, விவசாயத்திற்கே ஒரு இரங்கற்பா பாடி முடித்துக் கொள்ளலாம் என்கிறார் புத்ததேவ்.

''நிலைமையை நாம் எதார்த்தமாக மதிப்பீடு செய்ய வேண்டும். வாரிசுகளிடையே சொத்து பிரிக்கப்படுவதால் நிலம் துண்டுதுண்டாக ஆகி வருகிறது. விவசாய உள்ளீடு பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. அமோக விளைச்சல் காரணமாக விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதில்லை. தற்போதைய சூழ்நிலையில் நாம் பழைய திட்டத்தையே பின்பற்றினால் விவசாயத்துறையில் நாம் பெற்றிருக்கும்

www.padippakam.com

வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது'' என்று சுமித் சர்க்காருக்கு எழுதுகிறார்.

விவசாய உற்பத்தி விழுந்துவிட்டது என்பதை அலுவாலியாவே ஒப்புக் கொள்கிறார்; சிதம்பரமும் மறுக்க முடியாமல் மண்டையை ஆட்டுகிறார். விவசாய உற்பத்தி 2 சதவீதம் கூட வளரவில்லை என்று மன்மோகன் சிங் அரசைச் சாடுகிறது 'மார்க்சிஸ்டு'களின் மத்தியக் குழுத் தீர்மானம். புத்ததேவோ, அபரிமிதமான விளைச்சல் தான் விவசாயப் பொருட்களின் விலைவீழ்ச்சிக்குக் காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறார்.



நந்திக்கிராம்: போராடும் மக்களை ஒடுக்கும் போலீசு 'காம்ரேடுகள்'

விதை உரம் பூச்சிமருந்து போன்ற உள்ளீடு பொருட்களின் விலையேற்றத்துக்குக் காரணமான பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகளைப் பற்றி புத்ததேவ் மூச்சு விடவில்லை. விவசாயிகளுக்கு விலை நிர்ணய உரிமை வழங்கப்படாதது குறித்து வாய்திறக்கவில்லை. கூட்டுறவுக்கடன் விநியோகத்தில் இந்தியாவிலேயே மே.வங்கம் கடைசி இடத்தில் இருப்பது ஏன் என்ற கேள்விக்கு விடை இல்லை. தரகு முதலாளிகளுக்கு மானியங்கள் வாரி இறைக்கப்படுவதையும், விவசாயிகளின் மானியம் வெட்டப்படுவதையும், பாசனப்பராமரிப்பிலிருந்து அரசு விலகிக் கொண்டதையும் பற்றிப் பேச்சில்லை. தானியக் கொள்முதலிலிருந்து அரசு விலகிக் கொண்டுவிட்டதைப் பற்றியோ, அவை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிடப்பட்டிருப்பதைப் பற்றியோ, தானியச்சந்தையில் தலைவிரித்தாடும் ஊக வணிகச் சூதாட்டம் பற்றியோ ஒரு வார்த்தை இல்லை.

அதாவது, விவசாயத்தை தற்போதைய சூழ்நிலைக்குச் சீரழித்த ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவக் கொள்ளைகள் பற்றியும், கொள்ளைகள் பற்றியும் ஒரு வார்த்தை கூட இல்லை.

''இந்தச் சூழ்நிலையில் விவசாயத்தைக் கட்டி அழ முடியாது. அதன் மரணமும் தவிர்க்க இயலாதது. எனவே கருணைக் கொலை செய்து விடலாம்'' என்பதுதான் புத்ததேவ் தரும் விளக்கத்தின் பொருள். கடந்த 10 ஆண்டுகளில் ஒரு லட்சம் விவசாயிகள் ஏன் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற கேள்விக்கு விடை தேடி அலைபவர்கள் புத்ததேவின் இந்த விளக்கத்தைக் கேட்டு ஞானம் பெறலாம்.

''மூலதனத்தின் தாக்குதல் காரணமாக சிறுவீத விவசாய உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை அதற்கு நேரெதிரான முறையில் சித்தரித்து, விவசாய நெருக்கடிக்குத் தீர்வு சிறு விவசாயிகளை ஒழிப்பதே'' என்று பேசுபவர்களையும் வக்கிரப் பொருளாதாரவாதிகள் பட்டியலில் சேர்க்கிறார், பட்நாயக்.

●●●

**உ**ண்மையிலேயே சமூகத்துக்கு எந்த வகையிலும் தேவையில்லாததாகவும் உடனே ஒழித்துக் கட்டப்பட வேண்டியதாகவும் இருக்கும் வர்க்கம் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கமும் அதன் கூட்டாளியான தரகு முதலாளி வர்க்கமும்தான்.

''உற்பத்தி சார்ந்த தொழில்களில் மூலதனமிடுவது என்ற ஒரேயொரு நட்வடிக்கைக்காகத்தான் தனது இருத்தலுக்கான சமூக நியாயத்தை முதலாளி வர்க்கம் பெறுகிறது. மூலதனமிட்டுத் தொழில் தொடங்குவதென்பது முதலாளிகளின் கருணைச் செயல் அல்ல. வளர வேண்டும் அல்லது அழிய வேண்டும் என்ற விதியின் காரணமாக, தான் உயிரோடு இருப்பதற்கே மூலதனம் விரிவடைய வேண்டியிருக்கிறது'' என்று முதலாளித்துவத்தின் சமூகப் பாத்திரத்தை விளக்கினார் மார்க்ஸ்.

இன்றைய புதிய தாராளவாத சகாப்தத்தில் மூலதனமிடுதல் என்ற தனக்குரிய சமூகப் பாத்திரத்தை ஆற்றுவதோடு சமூகத்திடமிருந்து லஞ்சம் கேட்கிறார்கள் பன்னாட்டு முதலாளிகள். முதலாளித்துவத்தின் இந்தத் திமிரைச் சாடுகிறார் பட்நாயக். இலவச நிலம், கடன், முழு வரிவிலக்கு, ரியல் எஸ்டேட் சூதாட்டம் நடத்தும் வாய்ப்பு, தொழிலாளர் சட்டங்களிலிருந்து விலக்கு, வருமான வரி விலக்கு, லாப உத்திரவாதம் ஆகிய அனைத்தையும் வழங்கி பன்னாட்டு முதலாளிகளையும் அவர்களுடைய இந்நாட்டுக் கூட்டாளிகளையும் கவர்ந்திழுப்பதற்கு மாநில அரசுகள் ஒன்றோடொன்று போட்டி போடும் வெட்கக்கேட்டையும் விவரிக்கிறார்.

''இம்முதலாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளின் காரணமாக, அரசின் மீது நிதிச்சுமை கூடுகிறது... உலகவங்கியிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டு அதன் நிபந்தனைகளுக்குப் பணிந்து கல்வி, மருத்துவம் போன்ற அனைத்துக்கும் மக்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் நிலை உருவாகிறது. மொத்தத்தில் சமூகத்திடமிருந்து முதலாளிகள் கறந்தெடுக்கும் இந்த லஞ்சத்தின் சுமை, ஏழை உழைக்கும் மக்களின் தலைமீது தான் இறங்கு


படிப்பகம்

www.padippakam.com

கிறது'' என்ற உண்மையை அம்பலமாக்குகிறார். *(புதிய தாராளவாதத்தின் பரிமாணம், பீப்பிள்ஸ் டெமாக்ரசி, டிச.24, 2006.)*

இந்தக் கட்டுரை வெளிவந்த நாட்களில்தான் சிங்குர் பற்றியெரிந்து கொண்டிருந்தது. இந்தக் கட்டுரையின் விமரிசனத்தை மே.வங்க அரசின் நடைமுறையுடன் தம் கட்சி அணிகள் ஒப்பிட்டுப் பார்க்க மாட்டார்கள் என்று தலைமைக்கு அவ்வளவு நம்பிக்கை!

''சிங்குர் ஆலையை எதிர்ப்பவர்கள் விவசாயிகளே அல்ல, பதிவு செய்துகொள்ளாத சில குத்தகை விவசாயிகளும் நிலமில்லாத கூலி விவசாயிகளும்தான் இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள்.'' *(இந்து, டிச.1, 2006.)* என்கிறார் புத்ததேவ். அதாவது, நிலவுடைமை இல்லாதவன் விவசாயியே அல்ல என்று பிரகடனம் செய்கிறார் புத்ததேவ். 'நான் கம்யூனிஸ்டு அல்ல' என்பதை ஒரு மனிதன் இதைவிடத் தெளிவாக வேறு எப்படித்தான் கூற முடியும்?

•••

**ஏ**க்கருக்கு 8.6 இலட்சம் முதல் 12.76 இலட்சம் வரை விலை நிர்ணயம் செய்து 120 கோடி ரூபாயை 17,000 பேருக்குப் பிய்த்துப் போட்டிருக்கிறது 'மார்க்சிஸ்டு' அரசு. நிலத்திற்கு அரசு வழங்கும் தொகையில், முக்கால் பங்கு நிலச் சொந்தக்காரருக்கு, கால் பங்குதான் குத்தகை விவசாயிக்காம்! கூலி விவசாயிகளுக்கு எதுவும் கிடையாதாம். அவர்கள் மாற்று வேலைவாய்ப்புக்குப் பயிற்றுவிக்கப்படுவார்களாம்.

''சிங்குரில் நாங்கள் வழங்கியிருக்கும் நிவாரணம்தான் தலைசிறந்தது. இதன் மூலம் நிவாரணத்தொகை குறித்த பிரச்சினையை நாங்கள் தேசிய விவாதத்துக்குக் கொண்டு வந்துவிட்டோம்'' என்று மார்தட்டுகிறார் யெச்சூரி. *(இந்து, ஜன.1, 2007)* அப்படியானால் வாச்சாத்தி பிரச்சினைமூலம் கற்பழிப்புக்கான நிவாரணத் தொகை எவ்வளவு என்பதை தேசிய விவாதத்துக்குக் கொண்டு வந்ததற்காக திருவாளர் தேவாரமும் மார்தட்டிக் கொள்ளலாம்.

சிங்குர் நந்திக் கிராமம் விவசாயிகளை ஆதரிப்பவர்கள் பழமைவாதிகள் என்று கேலி செய்கிறார் புத்ததேவ். நரோத்னிக்குகளின் புதிய அவதாரங்கள் என்று சாடுகிறார் பிரகாஷ் காரத். சரி, இந்த போல்ஷ்விக்குகள் என்ன சொல்கிறார்கள்?

''மக்கள் ஜனநாயகப் புரட்சியைச் சாதிப்பதற்கான தொழிலாளர் விவசாயிகள் கூட்டணியை உருவாக்கப் பாடுபட்டு வருகிறோம். இந்த போர்த்தந்திர நோக்கத்துக்குக் கேடு விளைவிக்கும் எதையும் 'மார்க்சிஸ்டு கட்சி' அரசு செய்யாது'' என்கிறார் காரத். அடேயப்பா! சிங்குர், நந்திக் கிராமத்தில் இந்தப் பக்கம் விவசாயிகள் நிற்கிறார்கள்; எதிர்ப்பக்கம் நிற்கும் தொழிலாளி வர்க்கம் யார்? டாடாவா, சலீமா, ஜின்டாலா? அங்கே தொழி-

> ''டாடா நிறுவனத்துக்கும் மேற்கு வங்க அரசுக்கும் இடையே ஒரு உணர்ச்சி பூர்வமான உறவு இருக்கிறது'' என்று கூறுகிறார் அந்நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ரவிகாந்த். புத்ததேவுக்கும் டாடாவுக்கும் இடையிலான இந்த கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் உறவைத் தாங்கி நிற்கும் மேற்குவங்க மக்களின் வரிப்பணம் எத்தனைக் கோடிகள் என்ற உண்மை வெளிவராமலேயே போய்விடுமா என்ன?

லாளி - விவசாயி கூட்டணிக்கு என்ன ஆபத்து வந்தது? விவசாயிகளின் நிலத்தை எந்தத் தொழிலாளி அபகரித்துக் கொண்டான்? மக்கள் ஜனநாயகப் புரட்சியை 'டாடாவின் மக்கள் காரில்' ஏற்றி விரைவுபடுத்தக் கோரிய தொழிலாளி வர்க்கம் எது?

விவசாயிகள் இருக்கட்டும். குறைந்தபட்சக் கூலி, வேலை நேரம், பணிப் பாதுகாப்பு, ஓய்வூதியம் போன்ற எல்லா உரிமைகளையும் பறிகொடுத்து வரும் தொழிலாளி வர்க்கத்துக்கு டாடா ஆலையும், 'மார்க்சிஸ்டு'கள் அமைக்கவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் வழங்க இருப்பது என்ன?

அந்த இரகசியத்தை கொல்கத்தா முதலாளிகளிடம் தெரிவித்திருக்கிறார் யெச்சூரி: ''தொழிலாளிகளுக்குத் தற்போதுள்ள உரிமைகளைக் கரைப்பது (dilution) என்ற பேச்சுக்கே இடமில்லை. வேண்டுமானால் அவற்றை (fine tuning) ராவுவது பற்றி நாம் விவாதிக்கலாம். அதேநேரத்தில் (வெளியேற்றப்படும்) தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு வலைகள் (safety net) பற்றி முதலாளிகளும் யோசிக்க வேண்டும்.''

வேலைநிறுத்த உரிமையைக் கரைப்பதற்கும் ராவுவதற்கும் இடையில் நடைமுறையில் என்ன வேறுபாடு? தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு வலைகளுக்கும் விவசாயிகளுக்கான நிவாரணத்துக்கும் என்ன வேறுபாடு? டாடாவுக்கும் புத்ததேவுக்கும் என்ன வேறுபாடோ, அதே வேறுபாடுதான்.

மேற்கு வங்க அரசு என்பது ஒரு தொழிற்கழகம்; அதன் தலைமை நிர்வாக அதிகாரியான (CEO) புத்ததேவ் தன்னை முதல்வர் என்று அழைத்துக் கொள்கிறார். இந்தத் தொழிற்கழகத்தின் நிர்வாகிகள் குழுவோ (Board of Directors) தன்னை மத்தியக் குழு என்று கூறிக் கொள்கிறது.

கார்ப்பரேட் பார்ட்டியாகிய அந்தக் கட்சி தன்னை கம்யூனிஸ்டு பார்ட்டி என்று விளம்பரப்படுத்திக் கொள்கிறது. ''விளம்பரத்தில் என்ன இருக்கிறது? ஹமாம் சோப்பில் 'நேர்மை' எவ்வளவு இருக்கிறது என்று யாராவது சுரண்டிப் பார்க்கிறார்களா என்ன? சிவப்பு என்றால் கம்யூனிசம் என்று ஒரு ஃபீலிங். அவ்வளவுதான்'' என்று நீங்கள் எண்ணலாம்.

நந்திக்கிராமம் பற்றி எரிந்து கொண்டிருந்த அதே நாளில் ஐ.ஐ.எம். மாணவர்களிடையே புத்ததேவ் ஆற்றிய உரையைக் கீழ்கண்டவாறு பாராட்டினாராம் ஒரு மாணவர்: ''அவர் அப்படியே எங்களுடைய மொழியைப் பேசினார், ஒரு கம்யூனிஸ்டு பேசுகிறார் என்ற உணர்வு எந்தத் தருணத்திலும் எங்களுக்கு ஏற்படவில்லை.'' *(டெலிகிராப், ஜன.7, 2007)*

போலச் செய்தல் என்பதுதான் போலிகள் என்று அழைக்கப்படுவதற்கான முன் நிபந்தனை. அவ்வாறாயின், கம்யூனிஸ்டுகள் போல பேசக் கூடத் தெரியாத இவர்களை இனி மேலும் 'போலி கம்யூனிஸ்டுகள்' என்று அழைப்பது எப்படி நியாயமாக இருக்கும்?

• மருதையன்

படிப்பகம்

www.padippakam.com



சென்னை
புத்தகக் கண்காட்சி:

# நூல்களும் நுகர்பொருளாகும்!

"திருவண்ணாமலையைச் சுற்றி வந்தவர்களுக்கு முக்தி கிடைப்பது போல, சென்னைப் புத்தகக் கண்காட்சியை ஒருதரம் சுற்றி வருபவர்கள் வாசகர் ஆகலாம்'', என்கிறார் தினமணி ப.கிருஷ்ணன். ''என்னதான் கம்ப்யூட்டர், இன்டர்நெட் வந்தாலும் புத்தகம் படிக்கிற பழக்கம் அதிகரித்துள்ளது. இம்முறை 8,000 புதிய புத்தகங்கள், 474 கடைகள், விரிவுபடுத்தப்பட்ட 50,000 சதுர அடி பரப்பு, 5 கோடி புத்தகங்கள்... இவையே இதற்கு சாட்சி'' என்கின்றனர். ஆண்டுதோறும் புத்தகக் காட்சியை நடத்தி வரும் 'தென்னிந்தியப் பதிப்பாளர் மற்றும் விற்பனையாளர்கள் சங்க' (பபாசி) நிர்வாகிகள்.

ஒரு புத்தகக் காட்சியின் தகுதியை பிரம்மாண்ட கூட்டம் என்றும், திருவிழா என்றும் மதிப்பிட முடியுமா? சரி! நாம் தேடிப் பரவசம் அடையும்படி இந்தத் திருவிழாவில் அப்படி என்னதான் இருக்கிறது. பார்த்துவிடுவோம்.

•••

வர்த்தகம், தன்னம்பிக்கை, ஆன்மீகம், மார்க்சியம், ஹமாஸ், சதாம், நகைச்சுவை, ஜெமினி கணேசன் சினிமா, சாஃப்ட்வேர் என்று ரிப்பன்கடை போல பல வண்ணங்களில் கடை பரப்பியிருக்கிறார்கள், என்.ஆர்.ஐ டவுன்லோடு ஃபேக்டரி கிழக்கு பதிப்பகத்தினர். ஆன்மீகத்தின் ராசிபலனையும், பெரியாரைப் பற்றிய சின்னக் குத்தூசி கட்டுரைகளையும், இராமானுஜ தாத்தாச்சாரியையும் ல்லாலா - மிட்டாய்க் கடை போல அடுத்தடுத்து வைத்து பார்வையாளர்கள் எல்லாவற்றிலும் 'கொஞ்சம்' போட்டச் சொல்லும் சூடு பறக்கும் வியாபாரம் நக்கீரன் கடையில்.

சந்தேகமே இல்லாமல் இது அவர்கள் சொல்வதுபோல 'அறிவுத் திருவிழா'தான். ஆனால் அந்த அறிவின் நடைமுறைப் பயன் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டும். அறிவின் மாயவலையால் நடைமுறையில் பரிசோதனை செய்யப்படாத அறிவியல், பொறியியல், மருத்துவம், இலக்கியம், அரசியல்... அவ்வளவு ஏன்? சமையல் குறிப்புகளுக்காவது ஏதாவது பயன் இருக்கிறதா? பயன் நோக்கு இல்லாமல் வெறுமனே படிப்பை ஊக்குவிப்பது என்ற கண்காட்சிப் பாணிகளால் விளையும் நிலைமைகளை சற்று யோசித்துப் பாருங்கள்.

உதாரணமாக, இக்கண்காட்சியில், இதயநோய் சம்பந்தமாக நிறைய நூல்கள் வந்துள்ளன. சித்த, ஆயுர்வேத, யுனானி, அக்குபங்சர் போன்றவற்றில் இதய சிகிச்சையும் கூறப்பட்டுள்ளது. அதிகமாக விற்பனையாகும்



ஆன்மீகப் புத்தகங்களுக்கு
அவ்வளவு கடைகள்!
அதை மாய்ந்து மாய்ந்து
மாசறக் கற்கும்
வாசக பக்தர்களுக்கு
கேடி சங்கராச்சாரியார்
மீது கோபம் வந்து
குதிப்பதில்லையே?
இது படிப்பா. இல்லை நடிப்பா?

இவ்வகைப் புத்தகங்களைப் படிக்கும் வாசகர் நெஞ்சுவலி வந்தால் மருத்துவரிடம் அறிகுறிகளைக் கூறி, தெரிந்து கொண்டா மருந்து சாப்பிடப் போகிறார்? சாதாரண வாயுத் தொல்லைக்கு எக்ஸ்ரே, ஸ்கேன் என எட்டாயிரத்திற்கும் மேல் செலவழிக்காமலா இருக்கிறார்கள் இந்த அறிவாளிகள்? இல்லை. நாலு புத்தகம் படித்துத்தான் இங்கு வந்திருக்கிறேன் என்று பணம் பிடுங்கும் மருத்துவரிடம் வாதிக்கத்தான் செய்கிறார்களா? கற்றதனால் ஆன பயன் என்ன?

அதிகமாக விற்பனையாகும் நூல்களில் சமையல் புத்தகங்களும் அடங்கும். சமையலே நடக்காமல் நவீன உணவகங்களில் சாப்பிட்டுவிட்டு வேலைக்குப் போகும் நடுத்தர வர்க்கத்திற்கு சமையல் குறிப்பு எதற்கு உதவும்? எந்த பரிசோதனையும், உத்தர வாதமும், அறிவியல் கண்ணோட்டமும் இல்லாமல் 'ஆதித்யன் கிச்சன்' என்று யார் வேண்டுமானாலும் எழுதித் தள்ளும் இந்தப் புத்தகங்கள் ஒருவேளை உதவினாலும் அது மருத்துவச் செலவில்தானே கை வைக்கும்?

பொதுவாக புத்தகக் காட்சியை குறை சொல்வது என்பதற்காக அல்ல; திருவிழா களேபரத்தில் கையிலுள்ள கொஞ்ச நஞ்சமும் களவு போய்விடக்கூடாதல்லவா!

இலக்கியம் என்று பார்த்தால் பொன்னியின் செல்வன் பரவலாக இருக்கிறது. இது அறுபதுகளில் தொடராக வந்தபோது வந்தியத்தேவனின் அந்தப்புரப் பராக்கிரமங்களுக்காகத் தினவெடுத்து மேய்ந்த மூளைகள், அதையே இப்போது தொகுப்பாகப் புத்தம் புதிய வடிவில் பார்த்தவுடன் மனதில் 'ஆட்டோகிராஃப்' ஓடுகிறது.

அற்பத்தனத்தை நினைவு கூர்கிறது. உண்மையில் இலக்கியம் படிக்க விரும்புபவர்களுக்கு 'அன்னா கரீனினா'வும் 'அதிகாலை அமைதி'யும் தற்போதைய 'சோளகர் தொட்டி'யும் 'ஆழிசூழ் உலகும்' அல்லவா பயன்படும். இதுபோன்ற நூல்களைப் படிப்பவர்கள் மட்டுமல்ல, இதுபோன்ற கண்ணோட்டமுடைய படிப்பதற்கான வாய்ப்பு இல்லாதவர்களும்தான் சுனாமி வந்த போது கடற்கரைக்குச் சென்று அம்மக்களுக்கு உதவினார்கள். பொன்னியின் செல்வன் வகையறாக்களோ 'தி.ஜா'வின் காவிரிப் படுகையில்

www.padippakam.com

அமைந்த அக்கிரகாரங்களை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

'ஈராக்: ப்ளஸ் சதாம் மைனஸ் சதாம்', 'ஹிஸ்புல்லா' போன்ற புத்தகங்களின் மூலம் மத்திய ஆசிய அரசியலைப் புரிந்து கொள்ள முடியுமா? ஆனால் அந்த நூல்களுக்கான ஆரவார விற்பனை மற்றும் விளம்பரம் வாசகர்களுக்கான இந்தத் தேவையைப் பற்றிச் சிந்திப்பதற்குக் கூட அனுமதிப்பதில்லை. வரலாறு, அரசியல் கூர்மை மற்றும் படிப்பினை ஆகிய கண்ணோட்டமின்றி வெறுமனே. உடனடி நிகழ்ச்சிகளையும்; தனிநபர் செய்திகளையும் தொகுத்துத் தருவதையே வரலாறு என்ற தவறான வழிமுறையை புத்தகக் காட்சியின் இந்தப் புழுதிகள் ஏற்படுத்தி விடுகின்றன.

''பெயரில் 'மூப்பை'க் கொண்ட தமிழகத் தேசியக் கட்சித் தலைவருக்கும் 'ரா' என்ற முதலெழுத்தையும் 'தா' என்ற கடைசி எழுத்தையும் கொண்ட தங்கை நடிகைக்கும் கள்ளத் தொடர்பு'' போன்ற செய்திகளையும் ஆட்டோ சங்கரின் வாழ்க்கை வரலாறு என்ற பெயரில் கிசுகிசு வியாபாரம் செய்வதையும் அவற்றையே அரசியல் வரலாறு போல வீரியமாகக் காட்டும் சிட்டுக் குருவி லேகியங்கள் விற்கும் புத்தகத் திருவிழாவின் தகுதியைப் பார்த்து நாம் பூரிக்க முடியுமா?

ஆன்மீகப் புத்தகங்களுக்கு அவ்வளவு கடை. அதை மாய்ந்து மாய்ந்து மாசறக் கற்கும் வாசக பக்தர்களுக்கு கேடி சங்கராச்சாரியார் மீது கோபம் வந்து குதிப்பதில்லையே? இது படிப்பா? இல்லை நடிப்பா?

நாடு முழுக்க பச்சைப் படுகொலை செய்துவிட்டு 'பதவிசாக' விஜயபாரதம் ஸ்டால் போட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ். 'அருமை' வாசகர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே புத்தகத்திற்குள்ளே பாபிலோனாவுடைய பலான படத்தை வைத்துத் தருவதுபோல லேமினேட் செய்யப்பட்ட பாரதமாதாவின்டத்தை மறைத்து மறைத்து வைத்துத் தருகிறது. இந்தக் கொலைகாரர்களிடம் கேள்வி கேட்கும் அறிவுக்காவது இந்தப் புத்தகக் காட்சி பயன்படுகிறதா?

ஈஷா, ரமணாஸ்ரம் முதல் கார்ப்பரேட் மார்க்கெட்டிங் லெவல் கேடி சாமியார்கள் வரை புத்தகக் கடை என்ற முக்காட்டுக்குள் வெள்ளைக்கார மாமிகளோடு வீற்றிருந்த ஆன்மீக மோசடிகளை, 'அறிவுத் திருவிழா' என்றால் அடித்து விரட்டியிருக்க வேண்டாமா?

நாடு முழுக்க ஒரு லட்சம் விவசாயிகள் பன்னாட்டுக் கம்பெனிகளின் விதைகளைப் பயிரிட்டு பலனடைய முடியாமல் கடன்பட்டுத் தற்கொலை செய்து கொள்ளும்போது 'நான் மட்டும் எப்படியாவது பிழைத்துக் கொள்வேன்; அதற்கு இந்தப் புத்தகம் வழிகாட்டும்' என்று ஒரு பறவை அல்லது விலங்கு சொல்லலாம்; பரிணாம வளர்ச்சியில் உயர்ந்த மனிதன் சொல்ல முடியுமா? சொல்ல முடியும் என்கின்றன 'ஐ.ஏ.எஸ். இறையன்பு' முதல் 'அப்துல் கலாம்' வரை எழுதியிருக்கும் சுயமுன்னேற்ற நூல்கள்.



அல்லையன்ஸ் புத்தகக் கடையில் நாட்டுக்கு தேவையான நடிகர் சூர்யாவின் வாழ்க்கை வரலாறு, கிழக்குப் பதிப்பகத்தில் அம்பானி கஷ்டப்பட்டு உழைத்து (?!) முன்னேறிய கதை, காலச்சுவட்டில் சு.ராவின் ஒரு தடா கைதிக்கு எழுதிய கடிதங்கள் போன்ற காலத்தைவென்ற படைப்புகள்!

சுஜாதாவின் முதுகில் பூணூலாய் நெளியும் மனுஷ்ய புத்திரனின் உயிர்மைக் கல்கங்கள்; எடுபட்ட மதனின் என்சைக்ளோபீடியா முன்பதிவுகள், பகவத்கீதை, சுயமுன்னேற்றம் தலைப்புகளினூடே மார்க்சிய ஆசான்களின் புத்தகங்களையும், அடுக்கி வைத்துள்ள நியூ செஞ்சுரி புத்தக நிலையம்; காளான் வளர்ப்பு, நாய் வளர்ப்பு குழந்தை வளர்ப்பு என அறிவை வளர்க்கும் மணிமேகலை; இப்படி புத்தக மேய்ப்பர்கள் போதாதென்று ''கல்யாண மாலை''யின் சுயம்வரக் கூப்பன்களும் திருவிழாவை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. ''புத்தகக் கண்காட்சியில் புத்தகங்களை மட்டும் தேடாதீர்கள்; உங்கள் வாழ்க்கைத்துணையையும் தேர்ந்தெடுங்கள்'' என்று அந்தக் கடையிலிருந்த வாசகமே அறிவுத் திருவிழாவின் தரத்திற்குச் சான்று.

•••

அறிவுத் திருவிழாவின் ஒருசில பருக்கைகளே நாம் மேலே சொன்னது. செவிக்கு உணவுதான் இப்படி என்றால் வயிற்றுக்கு ஈயும் கேண்டீனிலோ 'இங்கு ஏன் வந்தாய்?' என்று நம் அறிவைப் பழிக்கும் அளவிற்கு விலை. இந்தப் புத்தகக் காட்சியில் ஒரு நல்லது கூட கண்ணில் படவில்லையா என்றால் ஒரு சில உண்டு.

அலைகள், திராவிடன், பாரதி புத்தகாலயம், கீழைக்காற்று, பொன்னி, தமிழ்மண் போன்ற பயனுள்ள பதிப்பகங்களும் அங்கே விடியல், புத்தா, தமிழ் முழக்கம் போன்றோர் வெளியிட்டிருந்த தேவையான நூல்களும் பெரும் வணிகர்கள் ஆதரிக்காத தனிநபர்கள் மற்றும் அரசியல் அமைப்புகளின் வெளியீடுகளை இவ்வகைக் கடைகளில் மட்டுமே பார்க்க முடிந்தது.

பொதுவில் படிப்பதன் மூலம் தங்களது வேலையில் திருத்தங்களைத் தேடும் இளைஞர்களுக்கு புத்தகங்கள் குறைவாகவே கிடைத்தன. அத்தகைய தேவைகளை நிறைவு செய்யும் வழக்கமான பழைய புத்தகக் கடைகளை புத்தகக் காட்சி நடக்கும் பள்ளிக்கு வெளியே வீதியில் கூடப் போடவிடாமல் பழைய புத்தகங்களை (அக்கடைக்காரர்களின் வாழ்க்கையையும் சேர்த்து) அகற்றியதன் மூலம் தனது நோக்கத்தையும், வர்க்கத்தையும் அடையாளம் காட்டிக் கொண்டது ''பபாசி''.

இனிவரும் காலங்களில் உண்மையான மக்கள் இலக்கியங்களுக்கும், சமூக அக்கறை கொண்ட பதிப்பகங்களுக்கும் கூட வீதியைத் தான் காட்டுவார்கள் போலும்!

• தளபதி



படிப்பகம்

www.padippakam.com



# திருட்டு முழி

சிறுகதை

''ஏ! சரோசா... என்ன, பாக்காத மாதிரிபோய்ட்ருக்க?''

''ஓ! ராணி, வா, வா, தப்பா எடுக்காதே, மாப்புள கார்ல வந்து இறங்கிட்டாரு, ஆலம் கரைக்கச் சொன்னாங்க. அதான் ஒன்ன கூடப் பாக்குல.''

''ஆமாம்! வீட்லதான் மாடு கன்ன வச்சிட்டு பொழுதுக்கும் லோல்படுற. இங்கவேற ஆடுறியா, ஆலம் கரைக்குறாளாம், அதுக்குத்தான நம்பள கூப்புடுவாளுவ, வீடியோ எடுக்குறப்ப பாரு நம்மள கண்ணு தெரியாம போய்டும். போறியா, வா கெடக்கு!''

''ஹி... ஹி... தே மெதுவா பேசு.. நீ வேற!'' சிரித்துக் கொண்டே ராணியை அடக்கினாள்சரோசா.

''சரி! மவள கடலூர்ல கட்டிக் கொடுத்தியே... நல்லா இருக்கா?'' பேசிக் கொண்டே திருகாணியை திருகியபடியே தோட்டை பிடித்துப் பார்த்துக் கொண்டாள்.

''ஊக்கும்... மருமவன் வேல சரியில்ல, அவரு வேல பாத்த சோடாகம்பெனிய இழுத்து மூடிட்டானுங்க. ரெண்டு புள்ளைய வச்சிகிட்டு அங்க இருந்து ஏன் கஷ்டப்படுறீங்கன்னு... சேம்பரத்துக்கே இட்டாந்துட்டேன்.''

''நம்ப விஜி புருஷன் கூட அப்புடி தாங்குறேன், புவனகிரியில ரொட்டிக் கம்பெனி வச்சு என்னமா இருந்தாரு, இப்ப என்னடான்னா? பொழப்பு சரியில்லேன்னு திருப்பூரு போயிருக்காராம் திருப்பூரு...!''

''ஆமாம் இப்ப எந்த புள்ள ரஸ்க்கு திங்குது, வர்க்கி கடிக்குது? நாய் பீயாட்டம் ஏதோ ஜிகினா தாள்ல சுத்தி வச்சி எப்பபோட்டதையோ கொடுக்குறான். அதத் திங்கதானே அலையுதுங்க.''

''என்னமோ போ... சொச்ச காலத்த ஓட்டுறதுக்குள்ளே உயிர் போய் உயிர் வருது... ஏது? புது டிசைனா காதுல கெடக்குது, நல்லா இருக்கு! எங்க எடுத்த?'' பேசிக் கொண்டே காது, மூக்கை நோட்டம் விட்டாள்.

''நீ வேறக்கா? காலுக்கு செருப்பே எடுக்க முடியல. இதுல காதுக்குளங்க எடுக்குறது? கல்யாண வீட்டுக்கு வெறுங்காதோட வந்தா நல்லா இருக்குமா? அதான் எரவ வாங்கிட்டு வந்தேன். உங்க அண்ணன் கொடுக்குற காசுல மாட்டுக்கே நல்ல மூக்கணாங் கயத்தக் காணோமாம். இதுல நான் எங்க தோட்டுக்கு அலையறது?'' சரோசா அலுத்துக் கொண்டாள்.

அதுவரை ராணிக்குப் பின்னால் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அஞ்சம்மாளைக் கவனிக்காத சரோசா வடக்கயும், தெக்கயும் அது வாய சைப்பதை திடீரென்று கவனித்தவாறு பக்கமாய் போய் உட்கார்ந்து தோளைப் பிடித்து விசாரித்தாள்.

''என்ன பாட்டி! என்ன அடையாளம் தெரியுதா? என்ன பலமா சாப்பாடா! வாயை தெறக்கல?''

''சிங்கப்பூரு குலுக்கி, இங்க வாடி சிறுக்கின்னானாம்! நீங்க மினுக்குற மினுக்குல என்ன அடையாளம் தெரியுமா? நானே வெத்தல பாக்கு இல்லாம வெறும் வாய மென்னுகிட்டு இருக்கேன்... கல்யாணம் பண்றாளுங்களாம். கல்யாணம்... வந்தவங்களுக்கு ஒரு வெத்தலபாக்கு குடுக்க ஆளக் காணோம். அவ அவ குந்தானியாட்டம் போட்டோ புடிக்க ஆடுறாளுவ! இவுனுவளா, பெரிய முந்தானையா இருந்தா தடுக்கு தூக்கிட்டு அலையுறானுவ!''

''கடைஞ்சமோர்ல வெண்ணைய எடுத்து, கடக்குட்டிக்கு கல்யாணம் பண்றவஃல... லேசு பட்ட சிறுக்கியா அவ...''

''தே நீ வேற... வந்த இடத்துல வம்ப வளத்து வுட்றாத சரோசா. அது வாயை புடுங்காத... வண்ட வண்டையாவரும்.''

''என்னாது...'' அஞ்சம்மாள் காதை தூக்கி ஏதோ கேட்க, ''ஒண்ணுமில்ல! தோ வெத்தல வாங்கியாறச் சொல்றேன்!'' என்று சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருக்கும் காசை அவிழ்த்தாள் ராணி.

''ஊருபட்ட சனம் வந்துருக்குன்னுதான் பேரு? எது, நம்பள வந்து எட்டி விசாரிக்குது. இதே அவுரு இருந்தா இப்புடி பார்க்காத மாதிரி போவானுவளா? சோறா கொளஞ்சி, ஆறால்ல ஓடி வருவானுவ, அஞ்சு பத்து வாங்க. இப்ப நமக்கு ஒரு சோடா வாங்கிக் கொடுக்க ஆளக் காணோம். அறுவடைக் காலத்துல எலிக்கு எட்டுக் கூத்தியாளாம்! இப்ப ஒரு நாயக் காணோம்!'' கிழவியின் வாய் எல்லா பக்கமும் வளைந்தது.

''அய்யய்யோ இது மண்டபத்த ரெண்டாக்காம போவாது போல இருக்கே! சரோசா நல்ல நேரத்துல நான் இத அழச்சுட்டு கௌம்பறேன்.. வரக்குள்ள சீர்காழி வந்துட்டுப் போ! என்ன?''

''எங்கக்கா இப்ப மறுவீடு வர்றப்ப எப்புடி வர்றது? அப்புறம் வாரேன்... நீயுந்தான் வீட்டுக்கு வந்து

"தோ பாரு, நீயும் கணேசனும் மட்டும் மொய் எழுதுங்க,
அந்த ராமலிங்கத்தை ஏன் பக்கத்துல வுட்டே?
பாதிய அவன் பாக்கெட்ல வச்சிட்டுப் போயிடுவான் புரியுதா?
அவன மெல்ல போவச் சொல்லிட்டு, கணேசன வச்சிட்டு நீ எழுது".
"வாங்க, மாப்ள வீடுன்னா இங்க எழுதுங்க,
பொண்ணு வீடுன்னா அங்க.."

www.padippakam.com



தங்கிட்டு காலைல போறது... இப்புடிப்பறக்குறியே...?''

''இல்ல சரோசா, கோவிச்சுக்காத... அடுத்த மொற வாரேன்! அங்க கோழி அடைக்கக்கூட ஆளு இல்ல... வர்றேன்.''

''ஏய் மாரி மவளே.. ரோசா... வர்றட்டா... கண்ணே புரியுல, இவுனுவ வேற சாணி மாடாட்டம் வழிய மறிச்சு மூஞ்சுல லைட்ட அடிக்குறானுவ... ஊக்கூம்'' கிழவி முனகிக்கொண்டே ஊர்ந்தது.

●●●

''**வா**ங்க, வாங்க என்று விரித்த உதடுகளை மூடாதவாறு கைகூப்பியவாறு மண்டபத்துக்குள் வந்தவர், சந்தேகம் கேட்ட மனைவியிடம் எல்லாம் நம்ப சொந்தக்காரங்கதான் என்று சொல்லிக் கொண்டே வெடுக்கென ஏதோ நினைவுக்கு வந்தது போல ''செருப்பை இடத்த மாத்தி அங்க ஒண்ணு, இங்க ஒண்ணுன்னு விட்டியா?'' என்று மனைவியிடம் கேட்க அவள் விழித்தாள்.

''ஏண்டி! அறிவு கெட்டவளே! ஒவ்வொரு கல்யாணத்துக்கும் ஒவ்வொரு செருப்பா வாங்க முடியும்? உனக்கு எத்தன மொற தொலைச்சாலும் புத்தி வராதா! போய் மொதல்ல மாத்தி போட்டுட்டு வா''

தணிந்த குரலில், அதட்டலாக மனைவியை விரட்ட அவள் பட்டுப் புடவை சரசரக்க வாசல் பக்கம் ஓடினாள்.

''என்ன முகூர்த்தமே முடிஞ்சு, பந்தி போட்டாச்சு! இப்பதான் வர்றீங்க?'' மண்டபத்துக்குள் வந்தவரை வரவேற்றார் ஒருவர்.

''அதுக்குள்ளயா? மெல்ல ஆகும்னு நெனச்சேன்.'' பக்கத்திலிருந்த வயதானவர் ''அதெல்லாம் அப்ப! அந்த காலத்துல அய்யுரு மந்தரம் சொல்லி முடிக்கறதுக்குள்ள உட்கார்ந்துருக்குற நம்ம காலே மரத்துப் போயிடும். காலத்துக்கு ஏத்த மாதிரி அவரும் மொண மொணன்னு முடிச்சுக்குறாரு'' என்றார்.

''எங்க இந்த அய்யரு? பொண்ணு, மாப்பிள்ளைய நெற நாழி வச்சு மணவறைக்கு அழைக்கணும். ஒண்ணத்தக் காணோம். இடுப்புல செல்லு போன சொருவிவிட்டு எடுத்து எடுத்து பேசுறதுல, அந்தாளு மந்திரம் சொல்லுறானா, வூட்டுக்குப் பேசுறானான்னு ஒண்ணுமே புரியல. எல்லாம் புது பழக்கமா இருக்கு!'' அலுத்துக்கொண்டார் இன்னொருவர்.

''என்ன சாப்புட்டாச்சா! சாப்புட்டீங்களா! எல்லாம் சாப்புட்டா ஒரு வேல முடிஞ்சிடும்...'' கூட்டத்தைக் கிளப்பிவிட்டது ஒரு குரல்.

''வாங்க, வாங்க, என்னா! என்ன பாக்குறீங்க... மாப்ள வீடுன்னா இங்க எழுதுங்க! பொண்ணு வீடுன்னா அங்க...!'' வேறு எதற்கோ அங்குமிங்கும் அலைந்தவரை மொய் எழுதும் மேசை பக்கம் கவனிக்க வைத்தது இன்னொரு குரல்.

மாப்பிள்ளையின் அப்பா தங்கசாமி சற்று தள்ளி நின்று மொய் எழுத ஆரம்பித்தவனிடம் ஜாடை காண்பித்து தனியாக அழைத்தார்.

''டேய்... கூப்ட்டா சட்டுன்னு வரமாட்டீயா! தோ பாரு நீயும் கணேசனும் மட்டும் மொய் எழுதுங்க, அந்த ராமலிங்கத்தை ஏன் பக்கத்துல வுட்ட? பாதிய அவன் பாக்கெட்ல வச்சிட்டுப் போயிடுவான். புரியுதா? அவன மெல்ல போவ சொல்லிட்டு, கணேசன வச்சிட்டு எழுது, நீ கீழ குனிஞ்சிகிட்டே இருக்காத. சாப்புட்டுப் போறவங்கள பாத்து விசாரி... அப்பதான் கதைக்கு ஆவும். பேபா போ சொன்னது ஞாபகம்'' தோளில் கிடந்த துண்டால் முகத்தைத் துடைத்தபடி... உள்ளே குரல் கேட்க வேகமாய்ப் போனார்.

●●●

''**அ**ப்பயே நெனச்சன்யா... மாப்பிள வீட்டு ஆளுன்னு ரோசனை பண்ணாம வுட்டுட்டேன்.'' கூட்டமாய்த் திரண்டபடி பந்தி பரிமாறும்

www.padippakam.com

வாசலில் ஒருவரை நடுவில் வைத்து ஆளாளுக்கு பேசிக் கொண்டிருந்தனர்.

தங்கசாமி வேகமாய் கூட்டத்தை விலக்கி நெருங்க ''வாங்க சம்மந்தி. திருட்டுப் பய போல இருக்கு. பந்தியில சாப்புடறப்பவே திருட்டு முழி முழிச்சிகிட்டு இருந்தான். பாத்தா மண்டபத்த நோட்டம் விட்டுகிட்டு கடைசியில இந்த சில்வர் குவளையத் தூக்கிகிட்டு வாசவரைக்கும் போயிட்டான்.. டப்புன்னு மடக்கிட்டேன். திருட்டுப் பய..'' அடிக்க கையை ஓங்கினார், பெண் வீட்டைச் சேர்ந்த ஒருவர்.

''ரெண்டு நாளா கண்ணுல வெளக்கெண்ணை ஊத்திகிட்டு பாத்துகிட்டு இருக்கோம். இங்கயே நொழஞ்சிட்டீயா?'' தங்கசாமி அவன் முதுகில் பலமாய் வைத்தார்.

''அடிக்காதீங்க... சத்தியமா சோறு திங்கதான் வந்தேன். தண்ணி குடிக்கத்தாங்க ஜெக்க எடுத்தேன். திருடல சார்...'' பிடிபட்டவன் கும்பிட்டபடி இறைஞ்சினான்.

''தண்ணி குடிக்குற பய, எதுக்குடா வாசல் வரைக்கும் குவளயத்தூக்கிட்டுப் போன... நாலு போட்டாதான்யா அடங்குவானுங்க.''

''ஊம் ஆள பாத்தியா! மாப்பிள மாதிரி, வெள்ள வேட்டி, வெள்ள சட்டை.''

''வீடு பூந்து, பகல் கொள்ள அடிக்குற காலமா போச்சு. இவனுகள எல்லாம் இப்புடியே விடக்கூடாதுங்க போய் போலீஸ் ஸ்டேசன்ல விடணும்.''

''நீங்கவேற அதவிட பின்னாடி கொண்டு போயி கட்டிவச்சி உரிக்கணும், பட்டப் பகல்ல இத்தன பேரு இருக்கோம். துணிச்சலா வந்து குவளயத் தூக்குறான்னா உயிரோடு விடலாமா இவனை?'' ஆளாளுக்கு ஆவேசத்துடன் அடிக்கப் பாய்ந்தனர்.

''ஐயா... ஐயா... சார்! சார்! அடிக்காதீங்க. இன்னம் உள்ளாற வரமாட்டேங்க. சத்தியமா திருடலங்க'' இழுத்த இழுப்பில் சட்டைப் பொத்தான்கள் கழண்டு விழ தழுதழுத்த குரலில் கெஞ்சினான்.

''குவளய திருடிட்டு பெரியயோக்கியன் மாதிரி பேசுறியா? மூஞ்சப்பாரு, கல்யாண வூட்ல நாம ஏன் இந்த நாயி மேல கை வச்சிகிட்டு! வுடக்கூடாது, வாங்க பத்துபேரு...




போய் ஸ்டேசன்ல செமத்தியா கவனிக்க வப்போம்... டேய் புடிடா குவளய கைல!''

''என்ன தைரியம் திருட்டுப் பயலுக்கு, போடு தேங்கா பால்சோறுன்னு உனக்கு மரியாத வேற கேக்குதா?'' சுற்றியிருந்தவர்கள் முணு முணுக்க அவனைத் தரதரவென்று வாசல் பக்கம் இழுத்துச் சென்றது ஒரு கூட்டம்.

கழுத்தில் மாலையுடன் புது மாப்பிள்ளை குறுக்கே வர, ''அட நீங்க போய் உங்க வேலைய பாருங்க மாப்பிள்ள, இவன நாங்க பாத்துக்குறோம். மத்தவங்கல்லாம் போங்க, போங்க...'', ஒருவர் நிலைமையைச் சமாளிக்கப் பார்த்தார்.

''நீங்க வாங்க! நீங்க வாங்க!'' வேகமாய் மாப்பிள்ளையை அழைத்து வந்து, மணவறைக்கு முன்பு பரப்பி வைக்கப்பட்டிருந்த குடம், குத்துவிளக்கு, பண்டபாத்திரங்கள், மிக்சி, கிரைண்டர் இவைகளோடு பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒன்றாய் நிற்க வைத்தார் சம்பந்தி.

''என்ன வீடியோகார்! கிண்டியிலேந்து கிரைண்டர் வரைக்கும் ஒரு பொருளும் விடுபடாம மாப்பிள்ளையோட சேர்த்து புடிங்க, பாத்தா எல்லாரும் திருப்தியா சொல்லணும்.'' தங்கசாமியும் படம் பிடிப்பதற்கு ஏத்த மாதிரி பாத்திரங்களை ஒழுங்குபடுத்தினார்.

''ஸ்மைல் ப்ளீஸ். கொஞ்சம் சிரிங்க,'' மாப்பிள்ளை சிரித்தபடி நிற்க திரும்பவும் வீடியோகிராபர் ''சார் கொஞ்சம் கண்ணை சொருகாம கொஞ்சம் அப்படியே என்ன முழிச்சு பாருங்க'' மாப்பிள்ளை அப்படியே முழிக்க வீடியோவும் புகைப்படக் கருவியும் போட்டி போட்டுக் கொண்டு வெளிச்சத்தைப் பாய்ச்சின.

கையில் ஒரேயொரு குவளையைக் கொடுத்து இழுத்துச் செல்லப் பட்டவன், பரவிக் கிடக்கும் பாத்திரங்களையும், அதனுடன் மாலையும் கழுத்துமாய் கம்பீரமாய் நிற்கும் மாப்பிள்ளையையும் மாறி மாறி இமைக்காமல் பார்த்தபடி நடுங்கியபடியே நடந்தான். மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் அவனைப் பார்த்தபடி ''மூஞ்சையும், முழியையும் பாரு, இங்க என்னடா பார்வை'' என்று ஆவேசமாய் வசவிக்கொண்டேயிருந்தனர்.

● துரை. சண்முகம்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (பிப்'07) முடியும் சந்தா எண்கள்:**

182, 188, 352, 355, 826, 1080, 1084, 1085, 1086, 1087, 1088, 1089, 1090, 1092, 1097, 1105, 1111.

**அடுத்த இதழுடன் (மார்ச் 07) முடியும் சந்தா எண்கள்:**

20, 76, 168, 788, 867, 1100, 1101, 1102, 1103, 1104, 1106, 1107, 1108, 1109, 1110, 1112, 1113, 1114, 1115, 1117, 1118, 1119, 1120, 1122, 1123, 1124, 1125, 1128, 1131, 1132, 1134, 1135, 1136, 1137, 1138, 1142, 1143, 1144,1145, 1147, 1402.

குறிப்பு: 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டடையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

## குரு:
## திரைப்பட விமரிசனம்

# அம்பானி:
## முதலாளிகளின் குரு
# மோசடிகளின் கரு




**90**-களில் பயங்கரவாதத்தினால் பரிதாபமாக்கப்பட்ட காதலர்களைப் படமாக்கிய மணிரத்தினம் 2000-ஆம் ஆண்டுகளில் பொருளாதாரத்தை முன்னேற்றிய முதலாளித்துவ நாயகர்களை நாடிச் சென்றிருக்கிறார். காலத்திற்கேற்ற மாற்றம்தான். 2020-இல் இந்தியா வல்லரசாகுமெனப் பிதற்றித்திரியும் அரசவைக் கோமாளி அப்துல் கலாம் இளைஞர்களிடம் விற்கப்படும் காலத்தில், இன்போசிஸ் நாராயணமூர்த்தியும், விப்ரோவின் பிரேம்ஜியும் பொன்முட்டையிடும் வாத்துக்கள் எனப் போற்றப்படும் நேரத்தில் இவர்களுக்கு முன்னோடியான அம்பானியை வெள்ளித்திரையில் நினைவு கூர்கிறார் மணிரத்தினம்.

எனினும் குரு திரைப்படத்தில் அவரது வழக்கமான காதல் சங்கதிகள் இல்லை. பணம் சம்பாதித்து முன்னேறவேண்டும் என்று போதிப்பதற்கு காதல் முதலான சென்டிமென்ட் பீடிகைகள் தேவையில்லையே?

இலட்சக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நாட்டில் நீங்கள் மட்டும் முன்னேறலாம் என்று தூண்டில் போடும் சுயமுன்னேற்ற வெறியைக் கலைக்கு கைமாற்றித் தந்திருக்கிறார் மணிரத்தினம். ஆனாலும் சமூகத்தில் கோலோச்சும் இந்த உணர்ச்சி கலையில் வெற்றி பெறவில்லை.

ஒரு வண்டிச்சக்கரத்தில் காலம் சுழன்று விஜயகாந்தோ, ரஜினிகாந்தோ மாபெரும் முதலாளிகளாவதை இரசித்துச் சலித்திருக்கும் இரசிகர்கள் அதையே இராஜீவ் மேனனின் லிரில் சோப் ஒளிப்பதிவிலும், ரஹ்மானின் கீ போர்டு அலறல் இசையிலும், மென்று முழுங்கும் மணிரத்தினத்தின் வசனத்திலும் லயிப்பதற்குத் தயாரில்லை. படத்தைப் பலரும் பார்த்திருக்க மாட்டீர்கள் என்பதாலும், பார்க்க வேண்டாம் என்பதாலும் கதையைச் சுருக்கமாகத் தருகிறோம்.

•••

குஜராத்தின் கிராமமொன்றில் பள்ளிக்கூட ஆசிரியரின் மகன் குரு (நிஜத்தில் அம்பானி), தந்தையின் விருப்பத்தை மீறி துருக்கி (ஏடன்) நாட்டிற்குச் செல்கிறான். பன்னாட்டு எண்ணெய் நிறுவனத்தில் சாதாரணப் பணியாளாய் வேலை செய்கிறான். ஓய்வு நேரத்தில் மல்லிகா ஷெராவத்தின் முக்கால் நிர்வாண நடனத்தை இரசிக்கிறான். கூடவே மூன்று சீட்டு விளையாட்டில் விடாமல் வெல்கிறான். காரணத்தைக் கேட்டால் கவனம் என்கிறான். அடுத்து சூபர்வைசர் பதவிக்கு உயருகிறான். அவனுக்கு டை கூடக் கட்டத் தெரியவில்லை என்று சுட்டிக் காட்டும் வெள்ளையனது பதவி உயர்வுக் கடிதத்தைக் கடாசிவிட்டு இனிமேல் வெள்ளைக்காரனுக்கு உழைப்பதில்லை எனவும் சொந்தமாகத் தொழில் தொடங்கி வெற்றி பெறுவேன் எனவும் கூறி நாடு திரும்புகிறான்.

வியாபாரத்தில் தோற்றுப் போவாய் என்று எச்சரிக்கும் தந்தையின் சாபத்தைப் புன்னகையால் மறுக்கிறான். வியாபாரத்துக்குத் தேவையான 15000 ரூபாயை வரதட்சிணையாக வாங்குவதற்காக, தன்னை விட ஒரு வயது அதிகமென்ற போதிலும் நண்பனின் அக்காவை (கோகிலா பென்) திருமணம் செய்து கொள்கிறான். மச்சான் மற்றும் மனைவியுடன் வியாபாரம் செய்ய நெரிசல் மிகுந்த பம்பாய்க்கு இடம் பெயர்கிறான்.

நூல் மார்க்கெட் தரகனாக வணிகம் செய்யத் தொடங்கி மின்னல் வேகத்தில் வளருகிறான். ஜவுளி வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் காண்ட்ராக்டர் (பாம்பே டையிங்கின் நுஸ்லி வாடியா) எனும் முதலாளியின் தடைகளை மீறி தனது சக்தி (ரிலையன்ஸ்) நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்துகிறான். இலட்சிய வேட்கை கொண்ட இந்த கிராமத்து இளைஞன் மீது காந்தியவாதியான ஒரு பத்திரிகை அதிபருக்கு (இந்தியன் எக்ஸ்பிரஸ் இராம்நாத் கோயங்கா) அனுதாபம் ஏற்படுகிறது. அதன் பிறகு அவனது தொழில் பிரம்மாண்டமாக வளருகிறது. ஜவுளி தொழிற்சாலை, பாலியஸ்டர் ஆலை, பங்குகள் வெளியீடு, மைதானத்தில் பங்குதாரர் கூட்டம் என்று உச்சத்திற்குப் போகிறான். இடையிடையே மணிரத்தினத்தின் திருப்திக்காக மனைவியைக் கொஞ்சி நடனம் ஆடுகிறான். இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறான்.

இவனது அசுர வளர்ச்சி குறித்து பத்திரிகை அதிபருக்குச் சந்தேகம் வருகிறது. அவனது முறைகேடுகளை அம்பலப்படுத்தி நிர்வாணப்படுத்தப் போவதாக அவர் எச்சரிக்கிறார். ''என்னை நிர்வாணப்படுத்துவதற்கு எல்லோரையும் நிர்வாணப்படுத்த வேண்டும்'' என்று பதிலளிக்கிறான் குரு. பத்திரிக்கை அதிபரின் நிருபர் (அருண்ஷோரி) குருவின் வணிக மோசடிகளை அம்பலப்படுத்துகிறார். குருவோ எல்லா பத்திரிக்கைகளுக்கும் விளம்பரத்தைக் கொடுத்து வாயடைக்க முயல்கிறான். இருப்பினும் இதனால் அவனுக்கு தொழிலில் நெருக்கடி ஏற்படுகிறது. அத்துடன் பக்கவாதத்தில் வேறு விழுகிறான். பத்திரிக்கை அதிபர் வருத்தப்படுகிறார். இறுதியில் அரசாங்கம் சக்தி நிறுவனத்தின் மோசடிகளை ஆராய விசாரணைக் கமிஷன் அமைக்கிறது.

''எதுவும் தெரியாத கிராமத்து இளைஞன் தொழில் துவங்க நினைத்து தவறா, தன்னை முடக்க

www.padippakam.com

நினைத்த பரம்பரை முதலாளிகளை வென்று காட்டியது குற்றமா, பல இலட்சம் பங்குதாரர்களின் வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம் தனது தொழில் சாம்ராச்சியத்தைக் கட்டிய மைத்தது "முறைகேடா'' என்று நீதி விசாரணையில் இறுதிக் காட்சியில் விஜயகாந்த் ஸ்டைலில் பொரிந்து தள்ளுகிறான். இவன் தொழிற்துறையின் தாதாவா அல்லது அறிவுஜீவியா என்று வியக்கும் நீதிபதிகள் அவன் மீதான குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவற்றைத் தள்ளுபடி செய்து அபராதம் மட்டும் விதிக்கின்றனர். கடைசிக் காட்சியில் பல்லாயிரம் பங்குதாரர்கள் ஆரவாரம் செய்ய, சக்தி நிறுவனத்தை உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக மாற்றுவேன் என்று மைதானத்தில் நின்று சூளுரைக்கிறான் நடுத்தர வயதைக் கடந்துவிட்ட குரு. இத்துடன் படம் முடிகிறது.

•••

**அ**ம்பானியின் வாழ்க்கையை அட்சரம் பிசகாமல் எடுத்திருக்கும் மணிரத்தினம் இந்தப் படத்தின் மூலம் கூறுவது என்ன? வணிகம் செய்து முன்னேற வேண்டும் என்பதை இரத்தத்தில் வரித்திருக்கும் ஒரு கிராமத்து இளைஞன் ஒரு இலட்சியவாதியைப் போலப் போராடுகிறான். அந்த இலட்சியமே வாழ்க்கை குறித்த அவனது அணுகுமுறை அனைத்தையும் நியாயப்படுத்துகிறது. தடையரண்களாய் வரும் அரசு, சட்டம், ஏனைய முதலாளிகள், அதிகாரவர்க்கம் முதலானவற்றை அவன் தகர்த்துச் செல்கிறான். தொழிற்துறையில் அவன் செய்யும் முறைகேடுகளைக் கூட இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் மணிரத்தினம்.

குருவை அம்பலப்படுத்தும் பத்திரிக்கை அதிபரும், நிருபரும் ஏதோ பகவத்கீதையின் கர்மவீரர்களைப் போலத்தான் செயல்படுகிறார்கள். குருவுக்கு எதிரான அவர்களது அறப் போராட்டம் மக்கள் நலன் குறித்த அக்கறையிலிருந்து எழவில்லை. பக்கவாதம் வந்து விழுந்தவுடனே குருவின் மீது அவர்கள் பரிதாபம் கொள்கிறார்கள். "நீ மட்டும் எப்படி ஒரு பெரிய முதலாளியானாய்'' என்பது மட்டுமே அவர்களது கேள்வி. இந்தக் கேள்விக்கான விடைதான் இந்தியத் தொழிற்துறையின் முன்னோடி எனப் போற்றப்படும் அம்பானியின் கதை.

1980-களில் இந்தியன் எக்ஸ்பிரஸின் ஆசிரியராக இருந்து அம்பானியை அம்பலப்படுத்திய அருண்

> **அம்பானி மட்டுமல்ல அம்பானி பற்றிய திரைப்படமும் வரி ஏய்ப்பு செய்கிறது. உ.பி மாநிலத்தில் குரு திரைப்படத்திற்கு வரிவிலக்கு வழங்கியிருக்கிறார் சமூகநீதிக் காவலர் முலாயம்.**

ஷோரி, 2002-இல் அம்பானி மரணமடைந்த போது பின்வருமாறு கூறினார்: "அம்பானி தகர்க்க வேண்டிய சட்டங்களைத்தான் தகர்த்தெறிந்தார். இன்று அந்த சட்டங்களெல்லாம் காலாவதியாகி தாராளமயம் அமலில் உள்ளது. இதற்காக இந்தியத் தொழிற்துறையே அம்பானிக்கு பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளது.'' அருண் ஷோரி சுயவிமர்சனம் மட்டும் செய்து கொள்ளவில்லை. பா.ஜ.க. அமைச்சராக இருந்தபோது ஐ.பி.சி.எல். எனப்படும் அரசின் எண்ணெய்க் கம்பெனியை அம்பானியின் ரிலையன்சு நிறுவனத்துக்குச் சொந்தமாக்கி பிராயச்சித்தமும் செய்து கொண்டார்.

அருண்ஷோரி, மணிரத்தினம் மட்டுமல்ல ஆளும் வர்க்கங்களும், ஊடகங்களும் கூட இப்படித்தான் அம்பானியைக் கொண்டாடுகின்றன. சுமார் 35 இலட்சம் பங்குதாரர்கள் அம்பானியால் வசதியுடன் வாழ்கிறார்கள்,

> **பாரம்பரியத் தரகு முதலாளிகளைவிடத் திறமையாகவும், துணிச்சலாகவும் லஞ்ச ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டு, அரசு எந்திரத்தையும் சட்டங்களையும் தனக்கு ஏற்றபடியெல்லாம் வளைத்து, ஊடகங்களை விலைக்கு வாங்கி, குறுகிய காலத்தில் கொள்ளை இலாபம் ஈட்டினார் என்பதுதான் அம்பானியின் சாதனை!**

"அம்பானியைப் போல ஒரு பத்து தொழிலதிபர்கள் இருந்தால் இந்தியா ஒரு பணக்கார நாடாகிவிடும்'' என்று சுயமுன்னேற்ற மதத்தின் குருவாகவே அம்பானி சித்தரிக்கப்படுகிறார். இந்த குருவின் உண்மையான கதை என்ன?

•••

**தொ**ழில் முனைவோர்களை வளரவிடாமல் நசுக்கிக் கொண்டிருந்த அரசாங்கத்தின் லைசன்ஸ் பெர்மிட் கோட்டா ராச்சியத்தைத் தகர்த்தார், பழம்பெருச்சாளிகளின் கோட்டையாக மோன நிலையில் தேங்கி இருந்த இந்தியத் தொழில்துறையை உடைத்து உள்ளே புகுந்து அதை விறுவிறுப்பானதாக்கினார் என்பதுதான் அம்பானிக்கு மணிரத்தினம் சூட்டும் புகழாரம்.

அன்று நேருவின் சோசலிசம் என்று புகழப்பட்டதும், தற்போது லைசன்ஸ், பெர்மிட், கோட்டா ராச்சியம் என்று இகழப்படுவதுமான அந்த கொள்கை, உண்மையில் தேசிய முதலாளிகளைத் தான் நசுக்கியதேயன்றி, டாடா பிர்லா போன்ற தரகு முதலாளிகளையல்ல. அதிகாரவர்க்க முதலாளிகள் மற்றும் தரகு முதலாளிகளின் நலன்களை ஒரே நேரத்தில் பாதுகாக்கும்படி உருவாக்கப்பட்டிருந்த அந்தக் கொள்கையின் ஆதாயங்களை சட்டபூர்வமாகவும் சந்து பொந்துகளில் புகுந்து லஞ்ச ஊழல்களின் மூலமும் அனுபவித்துக் கொண்டே, அவ்வப்போது தம் அதிருப்தியையும் வெளியிட்டுக் கொண்டிருந்தனர் அன்றைய தரகு முதலாளிகள்.

பாரம்பரியத் தரகு முதலாளிகளை விடத் திறமையாகவும், துணிச்சலாகவும் லஞ்ச ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டு அரசு எந்திரத்தையும் சட்டங்களையும் தனக்கு ஏற்றபடியெல்லாம் வளைத்து, ஊடகங்களை விலைக்கு வாங்கி குறுகிய காலத்தில் கொள்ளை லாபம் ஈட்டினார் என்பது தான் அம்பானியின் சாதனை. ரிலையன்சின் வளர்ச்சிக்கேற்ப சட்டங்கள் மாற்றப்பட்டன. ஏற்றுமதி செய்யும் மதிப்புக்கேற்ப இறக்குமதி செய்யலாம் என்ற விதிமுறையின் கீழ் மண்ணையும், மசாலாப் பொருட்களையும், படத்தில் வருவது போல் காலி அட்டைப் பெட்டிகளையும் ஏற்றுமதி செய்து உள்நாட்டில் கிராக்கியாக இருந்த ரேயான், நைலான், பாலியஸ்டர் செயற்கை இழைகளை இறக்குமதி செய்து பல மடங்கு இலாபம்


www.padippakam.com

ஈட்டினார். அம்பானியின் சாரத்துக்கு இந்த ஒரு சோறு முழுப்பதமாகும்.

அம்பானியின் ஆலைகளுக்கான இயந்திரங்கள் இறக்குமதி வரி செலுத்தாமல் மோசடி முறையில் கொண்டு வரப்பட்டதை கோயங்கா அம்பலப்படுத்தியதற்குக் காரணம் மணிரத்தினம் சித்தரிப்பது போல சில தனிமனிதர்களுக்கிடையே நடந்த ஈகோ பிரச்சினையோ, கோயங்காவின் அறவுணர்வோ அல்ல. புதிய தரகு முதலாளிகளின் பிரதிநிதியாக வந்த அம்பானியை பழையவர்களின் பிரதிநிதியான நுஸ்லிவாடியா எதிர்த்தார். தரகு முதலாளிகளுக்கிடையான இந்த முரண்பாட்டில் நாட்டு நலனும் இல்லை, ஒரு வெங்காயமும் இல்லை.

அவர்களின் இந்த முரண்பாடு அரசியலிலும் பிரதிபலித்தது. அம்பானியை இந்திராவும் ராஜீவும் காங்கிரசும் ஆதரித்தன; வாடியாவை ஜனதா ஆதரித்தது. 1980 தேர்தலை இவ்விரண்டு முதலாளித்துவப் பிரிவினரும் தான் ஸ்பான்சர் செய்தனர். அந்தத் தேர்தலில் இந்திரா வென்றதற்காக அம்பானி விருந்து வைத்துக் கொண்டாடினார். அதன் பிறகு ரிலையன்சின் மோசடிகள் கொடிகட்டிப் பறந்தன. ராஜீவும், பிரணாப் முகர்ஜியும், முரளி தியோராவும் அம்பானியின் தூதர்களாக அரசாங்கத்தில் செயல்பட்டனர். பல சட்டங்கள் ரிலையன்சின் வளர்ச்சிக்காக இயற்றப்பட்டன, மாற்றப்பட்டன, ஒத்தி வைக்கப்பட்டன. "நாட்டின் ஆண்டு வரவு செல்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கு முன்னர் ரிலையன்சின் அனுமதியைப் பெறும்" என்று ஒரு பழமொழியே டெல்லிப் பத்திரிக்கையாளர்களிடம் உருவாகியிருந்தது. மேல்மட்டத்து அதிகாரவர்க்கத்தின் பணிநியமன உத்தரவுகள் அரசாங்கத்திடமிருந்து வருவதற்குள் ரிலையன்ஸ் அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சென்றன.

வி.பி.சிங் பிரதமரானதும் அம்பானியின் மீது விசாரணைக் கமிஷன் நடந்து பல மோசடிகள் வெளிச்சத்திற்கு வந்தன. அதிலொன்று அமெரிக்காவிற்கு அருகிலிருக்கும் ஒரு தீவிலிருந்து அம்பானியின் பினாமி ஒருவர் முதலீடு செய்து வரிஏய்ப்பு செய்தது. ஃபேர்பாக்ஸ் எனும் அமெரிக்கத் துப்பறியும் நிறுவனம் ரிலையன்சின் அந்நியச் செலாவணி மோசடி குறித்து புலனாய்வு செய்ய நியமிக்கப்பட்டது. ஆயினும் இவற்றினாலெல்லாம் அம்பானியைத் தண்டிக்க முடியவில்லை. ஏனென்றால் இத்தகைய மோசடிகளை எல்லா தரகு முதலாளிகளும்தான் செய்து வந்தனர். அம்பானியோ அதில் பழம் தின்று கொட்டை போட்டார்.



திருபாய் அம்பானியின் குடும்பம்: திருட்டுக்கு ஒரு பல்கலைக் கழகம்!

எனவே, ஒரு கட்டத்துக்கு மேல் அம்பானி குறித்த விசாரணை செல்ல முடியவில்லை. கிணறு வெட்ட பூதம் கிளம்பும் என்பதால் மேலோட்டமாகத் தோண்டப்பட்ட கிணறு அவசர அவசரமாக மூடப்பட்டது. அம்பானியின் மீதான விசாரணைகள் நியாயமானவைதான் என்று விசாரிப்பதற்கு உச்சநீதி மன்ற நீதிபதிகள் இருவர் அடங்கிய விசாரணைக் கமிஷனொன்று நியமிக்கப்பட்டது. இந்த நீதிபதிகளும் அம்பானியின் மீதான புலனாய்வு, நாட்டு நலனுக்கும், பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிப்பவை என்று தீர்ப்பளித்தனர்.

இரண்டு தரகு முதலாளித்துவக் கும்பல்களிடையேயான மோதல், தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் ஒட்டு மொத்த நலன் கருதி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதுவே நாட்டுநலன் என்றும் அறிவிக்கப்பட்டு விட்டது. பிறகென்ன, நாட்டுப் பற்றுக்கு புதிய இலக்கணம் கண்ட அம்பானி இதன்பிறகு மாபெரும் ஏக போக முதலாளியாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். அம்பானியின் பிரதிநிதிகள் எல்லா ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளிலும் இருந்தனர். முலாயம் சிங் யாதவ், அமர்சிங், பிரமோத் மகாஜன், அருண்ஷோரி, பிரணாப் முகர்ஜி, முரளிதியோரா, முரளி மனோகர் ஜோஷி, அருண் ஜெட்லி, சந்திரபாபு நாயுடு, மோடி, கடைசியாக தயாநிதி மாறன் வரை இந்தப் பட்டியலில் பலர் உள்ளனர்.

நூல், ஜவுளி விற்பனையிலிருந்து ஜவுளி ஆலை, பாலியஸ்டரில் ஏக

www.padippakam.com

போக ஆலை, அதன் மூலப்பொருள் ஆலை. அதன் மூலப்பொருளான கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, தற்போது செல்பேசி சேவை, தகவல் தொழில்நுட்பத்துறை, நிதிக்காப்பீடு நிறுவனங்கள் என ஆக்டோபஸ் போல நாட்டையே கவ்வியிருக்கிறது அம்பானியின் சாம்ராச்சியம். எல்லாவற்றிலும் கால் பதித்திருக்கும் அம்பானி தான் முதலாளியாக உருவெடுத்த பின்னராவது தனது மோசடி முறைகளை மாற்றிக் கொண்டாரா? இல்லை முன்பை விட அதிகமாகவே செய்தார். முன்னர் பல தடையரண்களுடன் செய்ததை இப்போது சுதந்திரமாகச் செய்தார்.

தொழில் வளர்ச்சியைத் தடுக்கும் பத்தாம்பசலிச் சட்டங்கள் என்ற கூட்டை உடைத்துப் பிறந்த இலட்சிய வேட்கை கொண்ட சுதந்திரப் பறவையாக அம்பானியை மணிரத்தினம் சித்தரித்திருப்பது அப்பட்டமான பித்தலாட்டமாகும். முதலாளித்துவத்துக்கு உரிய சுதந்திரம் வழங்கப்பட்டால், அது சட்டபூர்வமான வழிகளிலும், நீதி நியாயத்துக்குக் கட்டுப்பட்டும் தனது சுரண்டலை நடத்தும் என்ற கருத்தே மோசடியானது. அத்தகைய சுதந்திரம் வழங்கப்படாததால்தான் அம்பானி சட்டத்தை மீற நேர்ந்தது என்று இந்தக் கிரிமினலுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறார் மணிரத்தினம்.


அம்பானியின் பல்லாயிரம் கோடி செல்போன் கொள்ளையை அதிகாரபூர்வமாகத் துவக்கி வைக்கிறார் அன்றைய பா.ஜ.க வின் மத்திய அமைச்சர் பிரமோத் மகாஜன்.

90-களில் தாராளமயக் கொள்கைகள் இந்தியத் தரகு முதலாளிகளுக்கு பூரண சுதந்திரத்தை வழங்கிய பின்னரும் என்ன நடந்தது? வில்போன் சேவைக்கு மட்டும் லைசன்சு பெற்ற ரிலையன்சு செல்போன் சேவையை முறைகேடாக அளித்து பல கோடி ரூபாய் கட்டண மோசடி செய்தது. இது அம்பலமானதும் அம்பானிக்குத் தகுந்தபடி சட்டத்தை மாற்றியது பா.ஜ.க. அரசு. அடுத்து வெளிநாடு அழைப்புக்களை உள்ளூர் அழைப்புக்களாக மாற்றி சுமார் 1300 கோடி ரூபாய் பகற்கொள்ளை அடித்தது ரிலையன்ஸ். தேசத்துரோகம், மோசடி போன்ற கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட்டன. சில கோடி ரூபாய் அபராதம் மட்டும் விதித்து வழக்கை முடித்துக் கொண்டது காங்கிரஸ் அரசாங்கம். ரிலையன்சின் நிறுவனங்கள் அனைத்தும் கொள்ளையில் பழுத்த புழுக்கள். இந்தக் கொள்ளையனைத்தான் இந்தியத் தொழில் துறையின் குரு என்கிறார் மணிரத்தினம்.

திரைப்படத்தில் ரிலையன்சின் பங்குதாரர்கள் ஏதோ ஒரு மக்கள்திரள் இயக்கம் போல சித்தரிக்கப்படுகிறார்கள். நட்சத்திர விடுதிகளில் நடந்து கொண்டிருந்த பங்குதாரர்கள் கூட்டத்தை திறந்தவெளி மைதானத்தில் நடத்தியவர், இலட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினரைப் பங்குச்சந்தையை நோக்கிக் கவர்ந்திழுத்தவர் என்பவை நிஜத்திலும் அம்பானிக்குச் செலுத்தப்படும் புகழாரங்கள்.

இலட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினரை நாட்டின் தொழில் வளர்ச்சியில் பங்கேற்கச் செய்தவர் அம்பானி என்பது போன்ற தோற்றம் இதன்மூலம் உருவாக்கப்படுகிறது. இலட்சக்கணக்கான சூதாடிகளை அம்பானி உருவாக்கினார் என்பதே உண்மை. பங்குச்சந்தையைப் பற்றிப் புரிந்து கொள்ளாதவரை இந்த உண்மையையும் புரிந்து கொள்ள இயலாது.

•••

பங்குச் சந்தை வர்த்தகம் என்பதற்கும் நாட்டின் உண்மையான பொருளாதாரத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அதன் இலக்கணமே சூதாட்டம்தான். புளூ சிப் கம்பெனிகள் என்று அழைக்கப்படும் 10, 15 பெரிய நிறுவனங்களின் பங்குகள் வாங்கி விற்கப்படும் மதிப்பை வைத்துத்தான் பங்குச்சந்தையின் குறியீட்டு எண் தீர்மானிக்கப்படுகிறது. நூற்றுக் கணக்கான பிற நிறுவனங்களின் பங்கு வர்த்தகத்தில் பலர் ஏமாறுவார்கள், சிலர் இலாபம் சம்பாதிப்பார்கள். பங்குகளின் முகமதிப்பு 10 ரூபாய் என்றால், அதன் சந்தை மதிப்பு 500 அல்லது 1000 ரூபாயாகக் கூட இருக்கும். இந்த விலை உயர்வை பன்னாட்டு நிதி நிறுவனங்களும், பங்குச் சந்தைத் தரகர்களும் செயற்கையான முறையில் உருவாக்குகின்றனர். பங்குகளுக்கான டிவிடெண்ட் எனப்படும் லாப ஈவுத் தொகை பங்கின் முகமதிப்பை வைத்தே வழங்கப்படுமேயன்றி அதன் சந்தை மதிப்பை வைத்து அல்ல.

இந்நிலையில், சிறுமுதலீட்டாளர் எனப்படும் நடுத்தர வர்க்கத்தினர் ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கி அதில் கிடைக்கும் வருடாந்திர ஈவுத் தொகையால் ஒரு போதும் இலாபம் சம்பாதிக்க முடியாது. மாறாக, அந்த பங்கின் சந்தை மதிப்பு பலமடங்கு உயரும் போது அவற்றை விற்று இலாபம் சம்பாதிக்க முடியும் என்பதுதான் பங்குச் சந்தையின் கவர்ச்சி. நடுத்தர வர்க்கத்தின் ஒரு பிரிவினருக்குக் கிடைக்கக்கூடிய இந்த இலாபம் என்பது இன்னொரு பிரிவினரின் நட்டம். திரைப்படத்தில் மூன்று மகள்களின் திருமணத்தை ரிலையன்சின் பங்குகளை விற்றுத் தான் நடத்தினேன் என்று கூறி ஒருவர் அம்பானிக்காக உருகுகிறார். தோற்றுப்போன வேறொரு சூதாடியின் 3 மகள்கள் முதிர்கன்னிகளாக மறுகிக் கொண்டிருப்பார்கள் என்பதே இதன் பொருள்.

பங்குகளின் மதிப்பு ஏன் உயர்கிறது, ஏன் சரிகிறது என்று தெரியாமல்

www.padippakam.com

நடுத்தர வர்க்கம் தத்தளித்துக் கொண்டிருக்க, இந்த உயர்வையும் சரிவையும் திரைமறைவில் இருந்து ஆட்டி வைக்கும் அம்பானிகளும், பன்னாட்டு நிதி நிறுவனங்களும் ஒவ்வொரு உயர்விலும் ஒவ்வொரு சரிவிலும் கோடிக்கணக்கில் சுருட்டிக் கொள்வார்கள். இந்த நரவேட்டையில் இவர்களோடு சேர்ந்து சில எலும்புகளைக் கடிக்கும் வாய்ப்புப் பெற்ற நபர்கள்தான் ''ஐயா உங்கள் அருளால் தான் 3 பெண்களுக்குக் கல்யாணம் செய்தேன்'' என்று அம்பானியிடம் உருகுவார்கள்.

70, 80-களில் ரிலையன்ஸ் நிறுவனம் பங்குகளை வெளியிட்டபோது அது அவரது மாநிலமான குஜராத்தில் பெரு வெற்றி பெற்றது. இன்றைக்கும் ரிலையன்சின் பங்குதாரர்களில் பெரும்பான்மையினர் குஜராத்தைச் சார்ந்த பனியாக்களே. இந்தச் சூதாடி வர்க்கம்தான் இந்துத்துவ வெறி எனும் அரசியல் ஒழுக்கக் கேட்டிலும் முன்னணியிலிருக்கிறது என்பதையும் வாசகர்கள் இங்கே ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

நாடா குத்துபவன் போல தனது பினாமி கம்பெனிகள் மூலம் ரிலையன்ஸ் பங்குகளைத் தானே வாங்கினார் அம்பானி. பங்குகளின் விலையை செயற்கையாக உயரச் செய்தார். விலை குறையும்போது தானே தனது பங்குகளை வாங்கி விலை சரியாமல் இருத்தவும் செய்தார். பணம் தேவைப்பட்ட போது, கடன் பத்திரங்களை வெளியிட்டார். கடன் பத்திரங்களுக்கு சட்டப்படி வட்டி கொடுத்தே ஆகவேண்டும். ஆனால் பங்குகளுக்கு ஈவுத்தொகை கொடுக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒரு கட்டத்தில் அவருக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டபோது, அரசியல் செல்வாக்கால் கடன் பத்திரங்களையே பங்குகளாக மாற்றிக் கொண்டார். ஆண்டுதோறும் வட்டி கிடைக்கும் என்று நம்பி கடன் பத்திரங்களை வாங்கிய நடுத்தரவர்க்கத்திற்குப் பட்டைநாமம் போட்டார்.

இத்தனையும் செய்து விட்டு, சாவதற்கு முன்பு ஒரு தத்துவத்தையும் சொன்னார் அம்பானி: ''ரிலையன்சை நான் உருவாக்கினேன் என்பது உண்மைதான். அம்பானிகள் வரலாம், போகலாம். ஆனால் ரிலையன்சின் பங்குதாரர்கள் அதை உயிர்ப்புடன் வைத்திருப்பார்கள்'' என்றார். ஆனால் அம்பானி செத்த இரண்டே வருடங்களுக்குள் அவரது மகன்கள் அம்பானியின் இந்த மரண வாக்குமூலமும் பொய்யே என்பதை நிரூபித்து விட்டார்கள்.

ரிலையன்சின் 52% பங்குகள் பொதுமக்கள் வசம் இருப்பதாகவும், 43% பங்குகளை பன்னாட்டு, உள்நாட்டு நிதி நிறுவனங்கள் வைத்திருப்பதாகவும், எஞ்சியுள்ள 5 சதவீத பங்குகள்தான் தங்கள் வசம் இருப்பதாகவும் அம்பானி குடும்பத்தினர் புளுகி வந்தனர். புத்திரர்களின் சொத்துச் சண்டையில் இந்தப் புளுகுணியாட்டமும் வெட்டவெளிச்சமானது. பொதுமக்களது கையில் இருக்கும் பங்குகள் உண்மையில் 13 சதவீதம் மட்டுமே. மீத 39 சதவீதம் அம்பானியின் பினாமி நிறுவனங்களிடம் இருக்கின்றன. இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டும் 500-ஐத் தாண்டும்.

மேட்ரிக்ஸ் எனும் ஆங்கிலப் படத்தில் பிரம்மாண்டமான கணினியொன்று செயற்கையான காட்சி உலகை உருவாக்கி எது மெய் எது பொய் என்று அறிய முடியாத குழப்பத்தை உருவாக்குவது போல, அடியையும் நுனியையும் கண்டுபிடிக்க முடியாத வண்ணம் இந்த பினாமி கம்பெனிகளை உருவாக்கியிருக்கிறார் அம்பானி. முதலீட்டாளர்களையும் அரசாங்கத்தையும் ஒரே நேரத்தில் ஏமாற்றும் இந்த கிரிமினல் குற்றம், வாரிசுச் சண்டையில் அம்பலமாகி நாறியது.

**இலட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினரை நாட்டின் தொழில்வளர்ச்சியில் பங்கேற்கச் செய்தவர் அம்பானி என்பது போன்ற தோற்றம் உருவாக்கப்படுகிறது. இலட்சக்கணக்கான சூதாடிகளை அம்பானி உருவாக்கினார் என்பதே உண்மை. பங்குச் சந்தையைப் பற்றிப் புரிந்து கொள்ளாத வரை இந்த உண்மையையும் புரிந்து கொள்ள இயலாது.**

எனினும், ரிலையன்ஸ் குடும்ப பிரச்சினையில் அரசு தலையிடாது என ப.சிதம்பரமும், ஏனைய மத்திய அமைச்சர்களும் அறிவித்தனர். இந்தியா டுடே உள்ளிட்ட ஊடகங்கள், அம்பானி வளர்த்த சாம்ராஜ்ஜியம் இப்படி அழியலாமா என்று சோக கீதம் இசைத்தனரேயொழிய யாரும் அம்பானி குடும்பத்தினர் தண்டிக்கப்பட வேண்டும் என்று எழுதவில்லை, அவர்களால் சூறையாடப்பட்ட சிறு முதலீட்டாளர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தக்கூட இல்லை.

''நாம் இந்தியாவிலேயே முதல் கம்பெனியானால் போதுமா, உலகத்திலேயே முதல் கம்பெனி ஆகவேண்டாமா'' என்று பங்குதாரர்கள் கூட்டத்தில் குரு முழங்கும் காட்சியுடன் படம் முடிகிறது. அன்று குருவின் மோசடிகள் என்று கூறப்பட்டவை அனைத்தும் இன்று சட்டபூர்வமாக்கப்பட்டு விட்டன. நடுத்தரவர்க்கத்துக்குப் பேராசை காட்டி பங்குச் சந்தைச் சூதாட்டத்தை நோக்கி அன்று அம்பானி கவர்ந்திழுத்தார் என்றால் இன்று ப.சிதம்பரம், நடுத்தர வர்க்கத்தின் சேமிப்புகளைப் பங்குச் சந்தையை நோக்கி நெட்டித் தள்ளுகிறார்.

வங்கிகளின் வைப்புநிதி, தபால் சேமிப்பு, அரசின் கடன் பத்திரங்கள் ஆகிய அனைத்துக்கும் வட்டி விகிதத்தைக் குறைத்து, நடுத்தரவர்க்கம் தனது சேமிப்பை பங்குச் சந்தையில் தான் போடவேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார் சிதம்பரம். இதுவும் போதாதென்று தற்போது தொழிலாளர்களின் சேமநல நிதி மூன்று இலட்சம் கோடி ரூபாயையும், பென்சன் நிதியையும் பங்குச் சந்தையில் வைத்துச் சூதாடவிருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இப்படி போதும் போதுமென்னும் அளவுக்கு முதலீட்டுக்கான பணம் ததும்பி வழிந்தும் பங்குதாரர்களைக் கொள்ளையடிக்கும் அம்பானியிசம் முடிவுக்கு வந்துவிடவில்லை. அதனைப் புதிய எல்லைக்கு வளர்த்திருக்கிறார்கள் அவரது புத்திரர்கள்.

•••

''ஒரு தபால் கார்டு விலையில் ஃபோன் பேசலாம் — திருபாய் அம்பானி கனவுத் திட்டம்'' என்ற பெயரில் பங்குச் சந்தையில் குதித்த ரிலையன்ஸ் இன்போகாம், ஒரு பங்கின் முகமதிப்பு ரூபாய் ஒன்று எனவும் பிரீமியம் மதிப்பு 49 ரூபாய் என 50 ரூபாயில் பங்குகளை வெளியிட்டது. இதற்கு 10 வருடங்களுக்கு ஈவுத்

www.padippakam.com

தொகையோ வட்டியோ கிடையாது என்ற நிபந்தனையும் உண்டு. பிரீமியம் எனப்படுவது அந்நிறுவனத்தின் சந்தை மதிப்பை வைத்துக் கணக்கிடப்படும் போலி மதிப்பு ஆகும். இந்தப் பங்குகள் வெளியீட்டில் முகேஷ் அம்பானியும், ரிலையன்சின் மேல் மட்ட அதிகார வர்க்கக் கும்பலும் தொழில் முனைவோர் என்ற பெயரில் பெருமளவு பங்குகளைத் தம் வசம் வைத்துக் கொண்டு 1 ரூபாய் விலையில் வாங்கிய பங்குகளை 50 ரூபாய்க்கு விற்று கோடிக்கணக்கில் சுருட்டினர். வாரிசுரிமைச் சண்டையின்போது அனில் அம்பானி கும்பல் இதை அம்பலப்படுத்தியது. அவலையும் உமியையும் கலந்து விற்கும் இந்தக் கலவையைத் *திறமை* என்று போற்றுவதா, மோசடி என்று குற்றம் சாட்டுவதா?

'அம்பானி ஒரு வெற்றிக் கதை' என்ற புத்தகத்தை எழுதிய என்.சொக்கனது கண்ணோட்டப்படி ''இது நடுத்தர வர்க்கப் பங்குதாரர்களின் அசட்டுத்தனத்துக்குக் கிடைத்த தண்டனை.'' கிழக்குப் பதிப்பகம் பெருமையுடன் வழங்கியுள்ள இந்தப் புத்தகம் பல்லாயிரக்கணக்கில் விற்றுத் தீர்ந்திருக்கிறதாம்.

அதில் அம்பானி வளைகுடா நாடான ஏமனில் இருக்கும்போது நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார் சொக்கன். அங்கே ஷெல் பெட்ரோல் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்தபோது அம்பானி சைடு பிசினஸ் ஒன்றைச் செய்கிறார். அது என்ன? ஏமனின் செலாவணியான *ரியால்* வெள்ளியில் தயாரிக்கப்பட்டதாம். அதன் நாணய மதிப்பைவிட அதில் கலந்துள்ள வெள்ளியின் மதிப்பு மிக அதிகமாம். இதைக் கண்டுபிடித்த அம்பானி *ரியால்* நாணயங்களைச் சேகரித்து வெள்ளியை உருக்கிப் பாளம் பாளமாகத் தயாரித்து இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்தாராம். அதில் அவருக்கு மிகப் பெரிய இலாபமாம்.

இந்தச் சம்பவம் குறித்து உங்கள் மனதில் தோன்றுவது என்ன? அட கயவாளி, ஒரு நாட்டின் நாணயத்தையே உருக்கி மோசடி செய்திருக்கிறானே என்று நினைக்கிறீர்களா? அம்பானியின் பக்தர் சொக்கன் அப்படிக் கருதவில்லை. அவர் சொல்கிறார், ''ஏமன் அரசாங்கத்தின் அசட்டுத்தனத்தை தனக்குச் சாதகமாக்கிப் பயன்படுத்தியதன் மூலம் அந்த அரசாங்கத்திற்குச் சரியான தண்டனை கொடுத்திருக்கிறார்'' என்று மெச்சுகிறார். மணிரத்தினத்தின் கருத்தும் இதுதான்.

•••

குரு திரைப்படம் தமிழகத்தில் வெற்றி பெறவில்லையென்றாலும் அது கூறவரும் செய்தி சமூகத்தில் செல்வாக்கு பெற்று வருகிறது. சுயநலன் என்பது ஒரு இழிந்த குணமாக கருத்தளவிலாவது பார்க்கப்படுவது, பொதுநலன் என்பது உயர்ந்த பண்பாக வாயளவிலாவது போற்றப்படுவது என்ற நிலை மாறி, பொதுநலன் பேசுவோர் ஏமாளிகளாகவும், சுயநல வெறி முன்னுதாரணமாகவும் சித்தரிக்கப்படும் காலத்தில் அத்தகையதொரு கயவனை நாயகனாகச் சித்தரிக்கிறது குரு. ரவுடிகள் நாயகர்களாக்கப்படுவதைக் காட்டிலும் இது அபாயகரமானது.

> **பொதுநலன் பேசுவோர் ஏமாளிகளாகவும், சுயநல வெறியே முன்னுதாரணமாகவும் சித்தரிக்கப்படும் காலத்தில் அத்தகையதொரு கயவனை நாயகனாகச் சித்தரிக்கிறது குரு. ரவுடிகள் நாயகர்களாக்கப்படுவதைக் காட்டிலும் இது அபாயகரமானது.**

ஏமாற்றுவதையும், சக மனிதர்களை மோசடி செய்வதையும், சமூகத்தை ஊழல்படுத்துவதையும் எவ்விதக் கூச்சமும் இன்றிச் செய்த ஒரு மனிதனை இலட்சியவாதியாகக் காட்டுகிறார் மணிரத்தினம். அம்பானியின் குற்றங்களை திரையில் அடக்கி வாசித்துக் காட்டுவதன் மூலம் அவன் கூறும் விழுமியங்களுக்கு வலுச்சேர்க்கிறார். அம்பானியின் கிரிமினல் குற்றங்கள் கூட தெரிந்து செய்தவையோ, வேண்டுமென்றே செய்தவையோ அல்ல என்பது போலவும், ஒரு இலட்சியத்தைத் துரத்திச் செல்லும் மனிதனை ஒரு கட்டத்துக்கு மேல் அந்த இலட்சியமே இழுத்துச் செல்வது போலவும், அதற்கு அந்த மனிதனைக் குற்றம் சாட்ட முடியாது என்பதாகவும் சித்தரிக்கிறார் மணிரத்தினம்.

சினிமாவில் மணிரத்தினம் சித்தரிக்கும் சென்டிமென்டுகள் உள்ளிட்ட குணாதிசயங்கள் அம்பானியைப் போன்ற முதலாளிகளிடம் அறவே இருப்பதில்லை. ஊனமுற்ற பெண்ணிடம் பாசம் வைக்கும் அம்பானி, கோயங்காவின் காரை உடைத்ததற்காக தன் மானேஜரைக் கண்டிக்கும் அம்பானி போன்ற காட்சிகள் ஒரு கிரிமினலுக்கு மனித முகம் தருவதற்காகவே உருவாக்கப்பட்ட காட்சிகள். சினிமா ரவுடிகளைப் பார்த்து ஸ்டைல்களைக் கற்றுக் கொண்ட நிஜ ரவுடிகள் போல சினிமா அம்பானிகளைப் பார்த்து நிஜ அம்பானிகளும் இனி வேடம் போடக்கூடும்.

•••

குரு திரைப்படத்தைப் பார்த்து விட்டு அம்பானியின் மனைவியும், மகன்களும் பாராட்டு தெரிவித்தார்களாம். பின்னே, இறுதிக் காட்சியில் பல்லாயிரம் பங்குதாரர்களின் மத்தியில் குரு ''நமது சக்தி நிறுவனத்தை உலகின் நம்பர் ஒன் நிறுவனமாக மாற்றுவோம்'' என்று சூளுரைப்பானே, அம்பானிகளை அந்தக் காட்சி வானத்தில் பறப்பது போலப் பரவசமடைய வைத்திருக்கும். பால் தாக்கரே பாராட்டிய பம்பாய்! அம்பானிகள் பாராட்டிய குரு! த.மு.எ.ச. விருதுதான் பாக்கி. அவர்களை முந்திக் கொண்டு சுஜாதா மிகப் பெரிய விருது கொடுத்துவிட்டார். குரு திரைப்படம் இந்தியத் திரையுலகை ஹாலிவுட் தரத்திற்குக் கொண்டு சென்று விட்டதாம். அப்புறம் என்ன? புஷ், என்ரான் போன்ற அமெரிக்க வில்லன்களை நாயகர்களாகச் சித்தரிக்கும் திரைக்கதைகளை சுஜாதா எழுதிக் கொடுக்க மணி இயக்கலாமே!

ஒரு கொசுறுச் செய்தி: குரு திரைப்படத்தின் தயாரிப்பில் அனில் அம்பானியின் அட்லாப் என்ற நிறுவனமும் இருக்கிறது. அதாவது இது (குரு) அம்பானி கம்பெனியின் விளம்பரப்படம். விளம்பரப் படத்தைப் போட்டுக் காட்டுவதற்கு இரசிகர்களிடம் காசு வசூலிக்கப்பட்டதாக எங்கேயாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதுதான் அம்பானி. செத்தபின்னும் திருடுவார், திருட்டு பாய் அம்பானி!

• வேல்ராசன்

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசை விழா

## நிகழ்ச்சி நிரல்

### கருத்தரங்கம்

**தலைமையுரை:**

தோழர் **கதிரவன்,**
மாநில செயற்குழு உறுப்பினர்,
ம.க.இ.க., தமிழ்நாடு.

**உரையாற்றுவோர்:**

'தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் சுதந்திரப் போர்!'

**பேரா. கே. ராசய்யன்**

'மக்கள் நலனில் மண்ணின் விடுதலையைக் கண்ட குடிமகன் திப்பு'

**சிக்கே ரங்க கவுடா,**
பெங்களூர்.

'அடிமை மோகம் அழியும் வரையில் விடிவு இல்லை, விடுதலையும் இல்லை!'

தோழர் **துரை சண்முகம்,**
ம.க.இ.க.

'புரட்சியின் நறுமணத்தைத் தன் மரணத்தில் நுகர்ந்த மாவீரன் பகத்சிங்'

**பேரா. சமன்லால்,**
புதுதில்லி.

'மறுகாலனியாதிக்கம்: விடுதலைப் போர் இன்னும் முடியவில்லை!'

தோழர் **மருதையன்,**
பொதுச்செயலர், ம.க.இ.க.

### கலை நிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சிகள்

- **தப்பாட்டம்:**
  தஞ்சை வீரசோழ தப்பாட்டக் குழு, ரெட்டிப்பாளையம், தஞ்சை.

- கிழக்கிந்தியக் கம்பெனியைக் குலை நடுங்க வைத்த மாவீரர்கள் - ஹைதர், திப்பு
  **இசைநிகழ்ச்சி**
  புதுக்கோட்டை இளைய இசை முரசு இ.எம். பாஷா குழுவினர்

- ''காளையார் கோயில் காட்டுக்குள்ளே - ரெண்டு கன்னி கழியாத மாமரங்க''
  **மருதிருவர் கும்மி**
  ராக்கம்மாள் குழுவினர், சின்ன மருதங்குடி, சிவகங்கை.

- ''உடம்பில் ஐரோப்பியனின் இரத்தம் ஓடாத அனைவரும் ஒன்று சேருங்கள்!''
  **மருதுவின் போர்க்களம் - மேடைநாடகம்**
  குமாரதாசன் (எ) மாயக்கண்ணன் குழுவினர்.

- ''வீழ்ந்தது பாளையங்கோட்டை, எழுந்தது ஊமையன் கோட்டை'' கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின் -
  **மேடை நாடகம்**
  குரண்டி மாறநாடு குழுவினர்.

- வேலூர்ப் புரட்சியை இசைத்த விரல்கள்
  **கவாலி இசை**
  மாசும் அலிஷா கலிபே ரப்பாயி ஜமால்லா பக்கிரிகள், வேலூர்.

- வீரத்திற்கு ஏது சாதி? கட்டபொம்மன், சுந்தரலிங்கம், ஊமைத்துரை, பொட்டிப் பகடை, பூலித்தேவன், ஒண்டிவீரன், விருப்பாட்சி கோபால நாயக்கர் போன்ற போராளிகளைப் போற்றும்
  **ஒயிலாட்டம்**
  கலை நன்மணி கொ.கைலாசமூர்த்தி குழு, தூத்துக்குடி.

- **புரட்சிகரக் கலை நிகழ்ச்சி**
  ம.க.இ.க. கலைக்குழு

- **சிறுவர்களின் கலைநிகழ்ச்சி**

- கிழக்கிந்தியக் கம்பெனியைப் பிய்த்தெறிந்த சூறாவளி! 1857 - சுதந்திரப் போர்!
  **கதைப் பாடல்**
  மையக்கலைக்குழு, ம.க.இ.க.

- ''மரணத்தின் முன்னிரவில் பகத்சிங்குடன் நாம்''
  **நாடகம்**
  மக்கள் கலை இலக்கியக் கழகம்

- தூக்குமரம்
  **இசைச்சித்திரம்**
  மக்கள் கலை இலக்கியக் கழகம்

- **ஜிம்ப்ளா மேளம்**
  க. அழகர் குழுவினர், செங்கோட்டைப்பட்டி.

- **தமுரு மேளம்:**
  சிதம்பரம் அன்பரசன் குழுவினர், சிதம்பரம்.

- காலனியாதிக்கக் கப்பலை மோதி நிறுத்திய சுதேசிப் பாறை - வ.உ.சி.
  **வில்லுப்பாட்டு**
  விளாத்திகுளம் இராசலட்சுமி குழுவினர்.

- ''சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே அன்று ஒரு தீரன் சின்னமலை''
  **உடுக்கடிப்பாடல்**
  பூலவாடி பொன்னுச்சாமி குழுவினர், உடுமலைப்பேட்டை.

- ''வர்த்தகம் செய்யவந்த கொக்கு நம் வாழ்வைக் கெடுக்கவந்த கோக்கு'' விடுதலைப் போரில் கலைஞர்கள்
  **தெருக்கூத்து**
  கலைமாமணி பாவலர் ஓம். முத்துமாரி கிராமியக் கலைக்குழுவினர், திருவேங்கடம்.

**தொடர்புக்கு**

**காளியப்பன்,**
**எண்: 1, அண்ணா நகர்,**
**தஞ்சாவூர் - 613 001.**
**✆ 9443188285**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN / CCN / 84 / '06-'08

www.padippakam.com



காலனியாதிக்க எதிர்ப்பு மரபு!
மறுகாலனியாக்கம் எதிர்த்து முழங்கு!!

1806 – வேலூர் சிப்பாய் புரட்சி
200–ஆம் ஆண்டு.

1857 – வடஇந்திய சுதந்திரப் போர்
150–ஆம் ஆண்டு.

1906 – வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல்
கம்பெனி துவக்கம்
100–ஆம் ஆண்டு.

1906 – ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிங்கம்
பகத்சிங் பிறந்தநாள்
100–ஆம் ஆண்டு.

**1800–1801**
**தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் இந்திய சுதந்திரப் போரின் மரபை உயர்த்திப் பிடிப்போம்!**

மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டுப்
படையெடுப்பிற்கெதிரான போர் முழக்கம்

# தமிழ் மக்கள் இசை விழா

பதினான்காம் ஆண்டு





பிப்ரவரி-24, 2007

சனிக்கிழமை

தஞ்சை-திருவள்ளுவர் திடல்

## மக்கள் கலை இலக்கியக் கழகம்

படிப்பகம்